உ

கணபதி துணை.

# விநாயகப்பிரபாவவிளக்கம்

இஃது.

கருங்குழி

ஏகாம்பர முதலியாரால்

சுருக்கமாக இயற்றியது.

சென்னை - புரசை,

கணேச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1908 ௵.

ஓம்

கணபதயே நம:



# விநாயக ப்ரபாவ விளக்கம்.

காப்பு.

வெண்பா.

பேரார் கணேசப் பெருமான் புகழ்பாடிச்
சீரார் திருவடியைச் சேவித்து—நாரார்
விநாயகப்ர பாவம் விளம்பிநிதஞ் சித்தி
விநாயகன்றா ளேவேண்டு வேன்,

உலகின்கண் உயர்வாகிய சிவம் எண்ணிறந்த அருள்வடிவங்களெடுத்து ஜீவர்களை யியக்குகின்றது. அவ்வருள் வடிவங்கள் சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவ

ன் மஹேஸ்வரன் உருத்திரன் விஷ்ணு பிரமன் னும் நவவடிவங்களும் விநாயகர் சுப்பிரமணியர் பத்திரர் முதலியவைகளுமாம். இவ்வாறு எடுத்தே தப்படும் மூர்த்தங்கள் யாவும் ஏகமாகிய சிவபரஞ் ரேயாம். இவற்றை வியக்குதற்கு இவற்றின் மேலொ ருகர்த்தாவுமின்று இம்மூர்த்திகள் பிதா மனைவி திரர் என்னும் பேதங்களாகப்படினும் முடிவிலொ பொருளேயாம்.

இவ்வாறு அபேதமாகிய விநாயகக்கடவுளை இ க்கு மேலொருநாயகருமில்லை யென்பதைப்பற்றி விநாயகரெனவும், பிரமதகணம் தேவகணம் பூத ம் அசுரகணம் மனுஷகணம் முதலிய சர்வகண க்குந் தலைவராதலால் கணபதியெனவும், விக்கி னை நீக்கவும் ஆக்கவும் வல்லவராதலால் விக்கினே ரெனவும், சிவபிரானுக்குத் திருக்குமாரராயிருப்பத பிள்ளையாரெனவும், வழங்குவர். சிவனும் உமை சத்துசித்தானவாறு விநாயகக்கடவுள் ஆனந்தம ம்பாயினமையினாலும் பூவும் பூவின்மணமும் பூவின் ண்ணமும் ஒருபொருளாயிருத்தல் போலவும் இவ் வரும் ஒருவரினொருவர் பிரிக்கக்கூடாத சச்சி னந்தவடிவமாயுள்ளார். ஆதலால் சிவனும் உமை யும் விநாயகரும் ஒருபொருளே யென்பது நிச்சய.

அவ்விநாயகரே சிவம் சத்தி முதலிய நவவடிவ களையுங்கொண்டு உயிர்களுக்கு அருள்வர், அவர் மு ற்கடவுளாயிருப்பது பற்றியே முதலில்வழிபட நூ களிலும் விதித்திருக்கின்றது.

அவரை மும்மூர்த்திகளும் வழிப்பட்டிருக்கின் ர்கள் அவர் மகிமைகளைவேதாகமங்கள் தம்மையா

கவும் எடுத்துமுறைபிடுகின்றது. அவரது சுரூப ர்ணனை,

ஒருகோட்டனிருசெவியன்மும்மதநால்வாயைந்து
ரத்தனாறு,தருகோட்டம்பிறையிதழித்தாழ்சடையன்
ருமொருவாரணத்தின்றாள்கள், உருகோட்டன்பொ
ட்வணங்கி யோவாதே யிரவுபக லுணர்வார்சிந்தை,
ருகோட்டுமயன்றிருமால் செல்வமுமொன்றோவென்
ச்செய்யுந்தேவே.

என்றும், சீதக்களபச்செந்தாமரைப் பூம்பாதச் லம்பும், பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும், பழைவயிறும் பெருப்பாரக்கோடும் வேழமுகமும் ளங்குசிந்தூரமும், ஐந்துகரமும் அங்குசபாசமும், நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும், நான்றவாயும் நா ருபுயமும், மூன்றுகண்ணும் மும்மதச்சுவடும், இர ண்டுசெவியும் இலங்குபொன்முடியும், திரண்டமுப்புரி நூல் திகழொளிமார்பும், என்னுந்திருவடிவையுடை வர். அன்றியும் ஓமென்னும் பிரணவமே இவர்வடி மென்னும் அதை இவரது யானைமுகமே சான்றாகூ றும் என்றும் பிரணவார்த்தருபியென்றும் கூறுவர். அன்றி யிவரில் வேறாகாத ஸ்கந்தர் உமை சிவன் என் வர்களையும் பிரணவவடிவங்களாக வேதங்கள்கூறும். இக்கணபதியானவர் மூன்றுசத்திகளோடுங் கூடியிரு ப்பவர். அச்சத்திகள் ஞானசத்தியாகிய சித்தியுங்கிரி யாசத்தியாகிய புத்தியும் இச்சாசத்தியாகிய வல்லபை யும் என்றும் இச்சையை இவ்விரண்டி லடக்கி சத்திக ளிரண்டென்றும் சித்தியால் ஞானமோக்ஷங்களும், புத்தியால் போகலாபங்களும் பிராப்தமாமென்பர்.

அப்பரம்பொருளின் மிக்கவர் வேறொருவரில்லை. அவரையே யுலகமெங்கும் வழிபடுகின்றது. அவ்விநாயகப்பூசையைச் செய்யாதவர் உலகில் ஒருவருமிரார். அவர் பூசையைச்செய்யாமல் ஒருவர் ஒருகாரியத்தைத்தொடங்குவாராயின் அந்தக்காரியம் விக்கினப்பட்டுப்போகின்றது. பின்பு அவர் வருந்திப்பெரியோர்களால் உண்மையை யறிந்து விநாயகப்பூசையைச் செய்தே முடிக்கிறார்கள். அதற்குத் திருஷ்டாந்தமாக, சிவபிரான் திரிபுரதகனஞ் செய்யப்போகும்பொழுது ஸ்ரீவிநாயகமூர்த்தியை நினைக்கமறந்து சென்றதால் தேர்முறிந்துவிட்டதென்றும் பின்பு விநாயகரை நினைந்துசென்று திரிபுரத்தை யெரித்ததாயும், க்ஷீராப்தியைக்கடைய விஷ்ணுமுதலிய தேவர்கள் விநாயகரை வழிபாடுசெய்யாமல் சென்றதால் மந்தரகிரியாகியமத்து கெடுதியாகி சடலுக்குள் அமிழ்ந்துவிட்டதாயும் பின்பு விநாயகரைப்பூசித்ததால் அம்மத்தாகியமலை மேலெழும்பெற்று கடலைக்கடைந்ததாயும் நூல்களிற் சொல்லியிருக்கின்றன. இல்லறத்திலெந்தக்காரியஞ் செய்யும்போதும் அவரை முன்னம் வணங்குவதற்காகவே வீட்டிற் கொவ்வொரு பிள்ளையாரைவைத்து வழிபாடுசெய்யும்படி யேற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்மகிமை தெரிந்து பூசிக்கும் அன்பர்தவிர, அறியாத அநிசிறுவர்களும் தங்களுக்கு வித்தை புத்தி முதலியவை யுண்டாக, தினம் பூசித்து வருவது வழக்கம். வித்தியாரம்பஞ்செய்யும் ஒவ்வொருவரும் ஸ்ரீகணபதிபூசையைச்செய்தே ஆரம்பிப்பார்கள். கல்யாணகாலத்தில் முதல் கணபதிபூஜையின்றிச்சடங்குதொடங்கார். கணபதிபூஜை முடிந்தபிறகே ஒவ்வொரு கன்னிகையின்கழுத்திலும் மங்கிலியம் தரிக்கப்படுகிறது. யாவரும் விநாயகப்பூசையைச்செய்தே இ

ஷ்ட சித்திகளைப்பெறத் தக்கவர்களாகவிருக்கிறார்கள். [illegible] தெய்வசிந்தனையில்லாத துரோகிகளுக்கும் நாஸ்திகராகிய பாபிகளுக்கும் இவ்வழிபாடு விதிக்கக் கூடாததாயிருக்கிறது. அவர்களை புத்திதிரும்பிச்செய்தால் செய்யலாம். ஆடுமாடுகளுக்கும் விநாயகபூஜை செய்ய விதிப்பாருண்டா அதுகளுக்கும் பூர்வபுண்ணியமிருந்தால் விநாயகராலயத்தில் புல்மேய்ந்துவருஞ் சமயத்தில் அபுத்திபூர்வமாகச் சுற்றிவரும் அதுபிரதக்ஷணமாகமுடிந்து அவைகளுக்கும் விநாயகப்பிரசாதமுண்டாகும் அதுபோல நாஸ்திகர்களும் தெய்வசிந்தையில்லாத மூடர்முதலாகியவர்களும் எந்தகாரணத்தினாலாவது விநாயகராலயத்தைச் சுற்றிவர ஏதுவுண்டாயின் அவர்களுக்கும் விநாயகப்பிரசாதமுண்டாகலாம்

வச்சிராங்கதபாண்டியன் வேட்டையாடி ஒருபுனுகுபூனையைத் துரத்துகையில் அது ஸ்ரீஅருணாசலமென்னும் திருமலையைச் சுற்றியோடியது அரசன் குதிரையின்மேலேறிச் சுற்றித்துரத்திவந்தான் அதனாற்புனுகுபூனையும் குதிரையும் கிரிபிரதக்ஷணஞ் செய்து பேறெய்தி புண்ணியவடிவங்களடைந்தன. அவ்வரசன் காலால் நடந்து வராமையால் கொஞ்சம் இடருழந்துவருந்தினனாயினும், திருமலையை வலம்வந்தபயனெய்தி அவனுங்கிருதார்த்தனாயினான். இவைகளை யோசிப்பதில் எந்தஜென்மமுடையவர் யாவராயிருப்பினும் விநாயகரைவழிபடுவோர்க்கு அவர் பிரசாதமுண்டாகலாமென்பதாயிற்று. ஆடுமாடு முதலிய ஜெந்துக்கள் விநாயகரைப் பூசிக்கவேணுமென்று அவைகளுக்குப் பகுத்தறியும் அறிவில்லாமையாலும் விரோதிக்கத்தக்க அபராத புத்தியில்லாததாலும் மனுஷஜென்மமுடையவராயிருந்தாலும் மிரு[illegible]தியாயுள்ள

வர்கள் பலரிருக்கலாம். அவாளறியாமலும் செய்த பாவ புண்ணியாதிற்குத் தக்கபடி விநாயகப்பெருமான் அருள்செய்வார். தெளிவுள்ளவர்களாயிருந்து தெய்வ நிந்தை செய்து திரியும்பாவிகளுக்கு நிரயத்துன்பமே பலனாய்முடியும்.

கலியுகம் அதிககொடுமையான யுகமாகையால் இந்தக்கலியுகத்தில் சிவவடிவமூர்த்திகள் தவிர அன்னியர்களான சிறுதெய்வங்கள் மோக்ஷங்களைக்கொடுக்கவல்லவராகார் என்னும் இத்தியாதி குருனுபவங்களை நோக்கி ஸ்ரீவிநாயகப் பெருமானை மனமொழிகாயத்தால் நினைந்து துதித்துக் கைகூப்பி வணங்கி தினந்தோறும் வழிபாடு செய்தலே வாழ்வாகும்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

கணபதியென்றிடக் கலங்கும்வல்வினை
கணபதியென்றிடக் காலனுங்கைதொழும்
கணபதியென்றிடக் கருமமாகையால்
கணபதியல்லதோர் கருமமில்லையே.

என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

அன்றியும் உருத்திராக்ஷ தாரணத்தால் கால்பங்கு பத்தியும் பஸ்மதாரணத்தால் அரைப் பங்குபக்தியும் கணேசமந்திரத்தால் முக்காற்பங்குபக்தியும் பூஜையால் முழுப்பங்குபக்தியும் அருள்வடிவத்தையும் அடியாரையும் பூஜிப்பதால் மோக்ஷமும் உண்மையாகக் கைகூடுமென்றும்,

தரித்திரன் தேவாலயத்தில் தீபமிடுக அதற்குஞ் சத்தியில்லாதவன் பிரதக்ஷணஞ் செய்க. தானே செய்யச்சக்தியில்லாதவன் பிறரைக்கொண்டு செய்விக்கவென்றும், பிரதக்ஷணத்தால் சகல பாபமும் நாசமாகும். பாதகங்களையும் வியாதிகளையும் பிரதக்ஷணத்தால்போக்கடிக்கலாமென்றும், அபிஷேகத்தால் ஆத்மசுத்தியும் நைவேத்தியத்தால் ஆயுளும் திருப்தியும் தூபத்தால்செல்வமும் தீபத்தால் ஞானமும் தாம்பூலத்தால் போகமும் நமஸ்காரம் ஜெபங்களால் சகலஅபீஷ்டங்களும் தவத்தால் புண்ணியமும் உண்டாகுமென்றும் விதித்திருக்கிறது.

மேலும் கணபதி ஆலயங்கோபுரம் மண்டபம் மதில்முதலியகட்டடம் பூஜைக்குரிய தட்டுகள் ஆர்த்திகள் தூபக்கால் குடை கொடி சாமரை விக்கிரகத்திருவுருவம் வாகனம் இவற்றைச்செய்துவைத்தல் உற்சவாதி கயிங்கிரியங்கள் செய்தல் கணபதிஆலயத்தில் அலகிடல் மெழுகல் தீபம்வைத்தல் முதலியவும் செய்தவர்கள் மாறாப்பெருவாழ்வெய்தி பலபோகங்களையும் அனுபவித்து இந்த ஜென்மத்திலேயே இருவினையொப்புவாய்ந்து தேகாந்தியத்தில் தேவவிமானத்தின்மேற்கொண்டு சகல ஆடம்பரத்துடன் விநாயகலோகமுற்று நான்குபதவிகளிலும் சுகித்துவாழ்வார்க ளென்பது நிச்சயம்.

மெய்யனாலயப்பணியுடல் விருத்தியைக்குறித்துச்
செய்துளோர் பெறும்பயனு மொண்மகமெலாஞ்செய்
ரெய்துமாறரி தென்றிடிலுறுதியோடியற்று [தோ
முய்தியாளருக்குரைத்திடவேண்டுவதெவனோ.

எட்டுச்செங்கவினாயினுமீர்ப்புனல் வேணி
வட்டச்சென்னியனாலயத்திருப்பணி வகுத்த
வொட்டிப்பெற்றவிவ்வுடற் பயனாவதென்றுணர்வீர்
அட்டுத்தீவினையைந்தவித்தொழுகுமந்தணர்காள்

என்று ஆன்றோரால் சொல்லப்பட்டிருக்கிறது. கணேசரது திருநாமங்களி லொன்றை நினைந்தமாத்திரத்தில் பாதகங்களெல்லாம் ஓடும். மரத்தின்மேலிருக்கும் பக்ஷிகள் பறந்து போவதற்கு ஒருகல்லெறிதல் போதுமானதுபோல விநாயகநாமஸ்மரணையால் வினைகளெல்லாம் பறக்கும் எவ்வளவு பாபஞ் செய்திருந்தவனாயினும் அன்புடன் விநாயகரது திருநாமத்தை வாயினால் உச்சரித்தபோதே பஞ்சமலையில் நெருப்புப்பொறி ஒன்று படுமாயின் அப்பஞ்சமலை பஸ்பமாய் இருந்த இடந்தெரியாமற் போவதுபோல் எல்லாப்பாபங்களும் நீங்கி புனிதனாவான் அவரை மனமாரத்துதிசெய்தவரிடத்து இரக்கமுற்று இளங்கன்றுக்கு இரங்கிவரும்பசுவைப்போல விநாயகர் அதிசீக்கிரத்தில்வந்து கிருபைபுரிவார் அவரை விட்டுநீங்காமலெப்போதும் விநாயகர் திருநடனஞ்செய்வர் ஒருவன் செவியிடத்தில் தெளிவாகக் கேட்கக் கணபதியென்று சொன்னால் அவனிட பாதகங்களெல்லாம் இடிவிழுந்த பனைபோல எரிந்துவிடும்.

ஜெனனமரணப்பிணிக்குபரமௌஷதமாயும் சர்வ பாவவிமோசனஞ் செய்வதாயும் சித்திகளைத்தரத்தக்கதாயும் மோக்ஷசாம்பிராச்சியத்தை யுண்டுபண்ணுவதாயுமுள்ளகணேசரது திவ்யமகிமை நிறைந்த அவரது அநுக்கிரகவிசேடம் பெற்றவர் பெருமையை நாம் வாயினாற் சொல்லவடங்குமோ.

ஆகையால் மிகவும் அருமையாகக் கிடைத்தமானிடதேகம் ஈடேறப்படுதற்கேயென்றுதெளிந்து திரிகரணசுத்தியாய்ந்து அன்பர்களது மனோபீஷ்டங்களையெல்லாம் சித்திசெய்விக்கும் சித்திவிநாயகப்பெருமானை ஆலயத்திலடைந்து பஞ்சகவ்வியம் பால் தயிர் இளநீர் கருப்பஞ்சாறு பழங்கள் ரசம் எலுமிச்சரசம் தேன் முப்பழம் பஞ்சாமிர்தம் சருக்கரை நெய் விபூதி சந்தனம் புனுகு பச்சைகற்பூரம் குங்குமப்பூ கோரோசனம் பன்னீர் இவைகளைத் தனித்தனியே யபிஷேகஞ் செய்து ஒருபொருளை அபிஷேகித்தவுடன் அதற்கு இடையில் சுத்தசலத்தால் அபிஷேகஞ்செய்யவேண்டியது அபிஷேகத்திரவியங்களுக்கு வேறு வேறுபலன்களானதால் தனித்தனியே அபிஷேகஞ்செய்து திருவாடையால் துவாலையிட்டு பட்டுபீதாம்பரவஸ்திரங்கள் சாத்தி எஞ்ஞோபவீதமணிந்து சொர்ணமாலை முத்துமாலைகள் உருத்திராக்ஷமாலை காதுகுண்டலம் கிரீடமுதலியவாபரணங்களணிந்து விபூதிசந்தனந்தரித்து குருவேர் மருதவனம் மல்லிகை முல்லை இருவாக்ஷி கொன்றை மந்தாரை நீலோற்பலம் அலரி பாதிரி முதலிய மலர்களும் இளசாய் மூன்றுஇதழ்களுடைய இருபத்தொரு அறுகும் அறுகுமாலையும் அணிந்துகண்களுக்கு ஆனந்தமாய்த் தரிசித்து, சுத்தான்னம் சர்க்கரைப்பொங்கல் பச்சைபயற்றுப் பொங்கல் சித்திரான்னம் கறியமுதுகளுடன் அலங்கார மகாநிவேதனம் பாயசம் வடை அதிரசம் சுகியம் பூரி மோணிலட்டுகம் அப்பம் எள்ளுண்டை அவல்கடலை இன்னும் வெவ்வேறு மோதகங்களும் பொரி நெய் தேன் பால் தயிர் பாணைக்கம் மாம்பழம் பலாப்பழம் வாழைப்பழம் தேங்காய்விளாங்கனி நாவற்கனி முதலியவைகளையும் நிவே

தித்துசோடசோபசாரத்துடன்ராக்ஷத்திர தீபம்தோர்தி பம்முதலிய தூபஆர்த்திகள் தூபதீப நிராஞ்சனஞ்செய்துபுட்பார்ச்சனையுஞ் செய்து வலம்வந்து அடியார்க ளெளியராய் அருள்புரியுங் கணேசபிரபுவை ஓம்மகா கணபதி, விநாயகப்பிரானே விக்கினப்பிரபுவே பிள் ளைப்பெருமானே சித்திபுத்தி சமேதா, மகோதரமூர்த்தி, பிரசித்தநாயகா, சிவகணநாதா, சிந்தூரரூபா ஜய சர்வேசா, அங்குசபாசா அம்பிகை தனையா ஜீவதயா ளா கிருபைக்கடலே என்று திரிகாணசுத்தியாய் ம னமாரத்துதித்து சிரங்கரமாரவணங்கி மனதிறைந்தியா னஞ்செய்து கணேசமந்திரத்தைச் செபித்து அன்பு மிகுந்து அவர்மகிமைப் பிரபாவங்களை சிரவணஞ்செய்து அருட்சத்திகளான சித்திபுத்திசமேதராய் எழுந்தருளிய அவர்திருவடிவைத் தரிசித்து அவர்திருவ ருட்பிரசாதத்தைப் பெற்று வாழ்வதே பெருவாழ்வா கும்.

காசியில் துண்டிவிநாயகர் காளத்தியில் அஞ்சத்தி விநாயகர் காஞ்சியில் விகடசக்கரவிநாயகர் சிதம்பரத் தில் கற்பகவிநாயகர் அருணசலத்தில் யானைதிறை கொண்டவிநாயகர் திருவானைககாவில் ஆதிவிநாயகர். வேதகிரியில் வண்டுவன விநாயகர் மதுரையில் சித்தி விநாயகர் சீகாழியில் ஆபத்துக்காத்தவிநாயகர் விருத்தகிரியில் ஆழத்துப்பிள்ளையார் திருநாரையூரில் பொல்லாப்பிள்ளையார்.

என்னுந்திவ்விய நாமங்களைப் பெற்று அந்தந்த தலங்களில் வெவ்வேறு திருவிளையாடல்களியற்றி எழு ந்தருளியிருக்கும் மூர்த்தங்களைகண்டு தரிசித்தவர்க

ளும் ஸ்தலவிநாயகரது மகிமா நாமங்களைக் கேட்டவர்களும் வாயினால் அத்திருநாமங்களை ஓதினவர்களும், எல்லாநன்மைகளையும் பெற்று மோக்ஷவீடடைவார்கள்.

திரிமூர்த்திகள் சிவபிரான் உமை சண்முகர் விஷ்ணு பிரமா ஆதிசேடன் இராவணன் ஒளவை நம்பியாண்டார் நம்பி அகஸ்தியர் விஸ்வாமித்திரர் வியாசர் காசிபர் முற்கலர் புருசுண்டி கிருச்சமதர் சந்தராங்கதன் உருக்குமாங்கதன் நளன் சூரசேனன் சோமகாந்தன் வல்லாளன் தக்கன் பீமராசன் இவர்களெல்லாம் பூசித்தும் விநாயகர் ஆலயஞ்செய்தும் விநாயகப்பிரதிட்டை செய்தும் விநாயகர் கயிங்கரியம் செய்தும் விநாயகசதுர்த்தி விரதமிருந்தும் இஷ்டசித்திகளை யடைந்தும் மோக்ஷமெய்தியும் தனதான்னிய புத்திரசம்பத்துக்களடைந்தும் தேவவிமானம்வரப்பெற்று அதின்மேலாரோகணித்துச் சென்று விநாயகரது சாலோக சாமீப சாரூபசாயுச்சிய மென்னும் பதவிகளைப் பெற்றும் வாழ்ந்திருந்தார்கள்.

## விநாயகர் திருவருட்பெற்றவர்கள்சரிதம்.

பொதியமலையிலிருந்து அகத்தியமுனிவர்கமண்டலத்திலிருந்த சலத்தை சீகாழியில் நந்தவனம்வைத்து அது சலமில்லாமல் உலர்ந்துவிட்டதற்காக இந்திரன் வேண்டிக்கொள்ள கமண்டலசலம் காவேரிநதியாகவந்து பாயும்படி விநாயகர் காகவடிவமாக வந்துகவிழ்த்து பிராமணச்சிறுவனாக அங்கு உலாவிக்கொண்டிருக்கும்போது முனிவர்தலையில் குட்ட, பின்தன் சுயரூபத்துடன் தரிசனங்கொடுக்கப்பணிந்து தோத்திரஞ்செய்துமனமுருகிய கும்பமுனிக்கு அருள்செய்ததயாநிதி

இலங்காதீபத்துக்கு அரசனாகிய இராவணேஸ்வரன் தன்தாய் தினந்தோறும் சிவதரிசனஞ் செய்வதற்காகக் கயிலையிற்சென்று சிவபிரானாலளித்தருளியசிவலிங்கத்தைப்பெற்றுக்கொண்டு வழியில்வரும்போது அவ்விலிங்கம் இலங்கையில்வந்துபிரதிட்டைசெய்யாவண்ணம் தேவர்களால் வேண்டப்பெற்ற விநாயகக்கடவுள் பிராமணச்சிறுவனாகி அவனுக்கெதிரில் வந்து அந்த இராவணனுக்குச் சலபாதைவரும்படி செய்ய சிவலிங்கமூர்த்தியை அவரிடங்கொடுத்து சலபாதைக்குப்போய்சுத்திசெய்து வருவதற்குள் கூவி அவ்விலிங்கத்தை பூமியில்வைத்துவிட இராவணன் பிராமணச்சிறுவன் தலையில்குட்டி சிவலிங்கத்தைபெயர்த்தெடுத்தபோது அதுகைக்கு வராமலிருப்பதால் அப்போது நிலைத்து அதுகோகர்ணத்தலமாய்விட்டது இராவணனுக்குமுன் சுயவடிவத்துடன் தோன்ற அவன் நடுங்கிப் பணிந்து தோத்திரஞ்செய்ய இராவணனுக்கு அருள்செய்ய கருணாகரர்.

திருநாரையூரில் நம்பியென்ற பிராமணச்சிறுவர் அந்தக்ஷேத்திரத்திலுள்ள பொல்லாப் பிள்ளையாருக்கு பூஜைசெய்யும் பிதாவானவர் ஒரூருக்குச் சென்றதால் பிதாசொல்லியபடி மைந்தன் பிள்ளையாரைப் பூஜைசெய்ய ஆலயத்திற்போய் திருமஞ்சனஞ்செய்து நிவேதனத்தை முன்னேவைத்து அமுதுசெய்ய வேண்டுமென்று வணங்க அமுதுசெய்யாதிருக்கக்கண்டு அடியேன்மீது ஏதாவதுதவறுண்டோ விநாயகர் நான்நிவேதித்த அமுதை உண்ணாதிருக்கின்றாரேயென்று தன்தலையை கல்லின்மோதப் போகுங்கால்பிள்ளையார்நம்பி பொறுவென்றுதடுத்து அவ்வமுதையெல்லாம் அருந்தினவுடன் எந்

தையே என் வேதபாடத்தை நீயே சொல்லிக்கொடுக்க வேண்டுமென அப்படியே விநாயகர் ஓதுவிக்க ஓதி நம்பி மகிழ்ந்திருந்தனர். அப்போது திருவாரூரில்தியாகேசர் திருவடிகளுக்கன்புபூண்டு அரசுபுரிந்திருந்த அபயகுலசேகர சோழமகாராசன் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் சமயகுரவர்கள் அருளிய தேவாரத்திருமுறைகளில் ஒவ்வொரு பதிகங்களைத் தன்னிடம்வரும் அன்பர்கள் உரைக்கக்கேட்டு மனமுருகி ஆநந்தித்து அரிய திருமுறைகளைத்தேடி எங்கும் அகப்படாமையால் வருந்திய மனதுடனிருக்குங்கால், திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பிக்குப் பொல்லாப்பிள்ளையார் பிரத்தியக்ஷமாந் தன்மையைக் கேள்வியுற்று முக்கனி, தேங்காய், தேன், அவல், அப்பம், எள்ளுருண்டை முதலிய பட்சணங்கள் அளவற்றதை எடுப்பித்துக்கொண்டு திருநாரையூரைச் சேர்ந்து நம்பியின்றளை வணங்கிப்பிள்ளைப்பெருமானுக்கு இவைகளை நிவேதிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டபடி நம்பி, விநாயகர் திருவடிகளை வணங்கிப் படைத்தகாலையிற் பெருமான் றனது துதிக்கையாற் படைத்தவைகளை யெல்லா மெடுத்துப்புசித்து அந்நிவேதன வகைகளிருந்த விடந்தெரியாமற் செய்தனர்.

பிறகு அரசன் நம்பியாண்டார் நம்பியை வணங்கித்துதித்து மூவர்தேவாரத் திருமுறைகள் பூமியின்கண் விளங்கும்படி செய்யவேண்டியதென்று வேண்டிக்கொள்ள, பொல்லாப்பிள்ளையாரை நம்பி வணங்கிக் கேட்க, அவரருளியபடி தில்லைமன்றுள் நடேசப்பெருமானது பின்பக்கத் தறையில் திருமுறைகளைச் சேமித்து அம்மூவர் கையடையாளங்கள் வைத்திருக்கிறதெ

ன்று அவற்றின் பெருமைகளையும் மற்றவடியவர்க ளின் சரிதங்களையுஞ் சொல்லினர். அரசன் நம்பி யுடன் தில்லைத்தலமடைந்து, தில்லைமூவாயிரவர்க்கு விநாயகப்பெருமா னருளியதை யுரைத்த காலையில் அவ்வந்தணர்கள் சம்பந்தராதி மூவர் வந்தால்தான் அவ்வறையைத் திறக்கலாமென, உடனே அரசன் ஆளுடைய பிள்ளையாராதி மூவருக்கும் அபிஷேகஞ் செய்துவீதியுலாக்கொண்டாடி, ஆலயப்பிரதக்ஷணமா கத்திருமுறை யிருக்குமிடத்திற் கொண்டுவந்து நிறுத் தி மூவர் வந்திருக்கிறார்களென்று சொல்ல,மறையோர் கள் வந்து களித்து நடேசர் திருநடனமண்டபத் தின் மேற்குப் பக்கத்தில் மூவர் கையிலச்சினையாகிய அடையாளத்தை நீக்கிப் பார்த்ததில், வன்மீகம் மூடி யிருக்கக் கண்டு அச்செல்மண் நனையத் தயிலஞ் சொரிந்து திருவேடெல்லா மெடுத்தகாலையில் அளவில் லாத ஏடுகள் பழுதாயிருக்கக்கண்டு அரசன் மனமரு த்தமுற்றபோது வேண்டியவைகளை வைத்தோமென்று அரசன்முதல் யாவருங்கேட்க அசரீரியுண்டாயிற்று. அதைக்கேட்டு யாவருமகிழ்ந்தார்கள். நம்பியாண்டார் நம்பி திருமுறைக்குவரிசை யேற்படுத்தித் திருத்தொ ண்டர் புகழைக் கலித்துறையந்தாதியாற் பாடிப்பே ரானந்தப் பெருவாழ்வுற்றிருந்தனர். இத்தன்மைத்தாகி ய அன்பு மிகுந்த சிறுவராகியநம்பியாண்டார்நம்பிக்குப் பிரத்தியக்ஷமாகி அவரால் படைத்தவைகளை யுண்டு உலகினர்களுய்யத் தமிழ்வேதத்தை வெளிப்படுத்தி யருளிய கிருபாமூர்த்தியாகிய கணேசப்பெருமான்.

ஔவையார் விநாயகப்பெருமானை உபாசித்தது.

சுந்தரமூர்த்திநாயனார் வெள்ளையானைமீதும் சேர மான்பெருமாள் நாயனார் குதிரைமீதும், ஆரோகணித்த்

துத் திருக்கைலாயஞ் செல்லும்போது ஔவையாரையுமழைக்க, அவர் விநாயகபூசை செய்துவிட்டு வருவதாய்ச் சொல்லிப் பூசையைவிரைவாகச்செய்யவிநாயகப்பெருமான் அவசரப்படாமல் கிரமமாகச் செய்யென்று சொல்ல,அவ்வண்ணமே விதிப்படி பூசைசெய்து சீதக்களபவென்னும் அகவலை ஓதித்துதிக்க விநாயகர் மகிழ்ந்து தனது துதிக்கையினால் ஔவையை எடுத்து அவ்விருவரும் வந்து சேர்வதற்குமுன் கைலையில்விட்டருள, பின்வந்துசேர்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள்நாயனாரும், ஔவையைக்கண்டு ஆச்சரியமுற்று எப்படி எங்களுக்குமுன்னம் வந்தனையென்று கேட்க அதற்கு,

மதுரமொழிநல்லுமையாள்புதல்வன்மலர்ப்பதத்தை
முதிரநினையவல்லார்க்கரிதோமுகில்போன்முழங்கி
அதிரநடந்திடும்யானையுந்தேருமதன்பின்வருங்
குதிரையுங்காதங்கிழவியுங்காதங்குலமன்னனே.

என்று உத்தரஞ்சொல்லி வீற்றிருக்கும்படி ஔவைக்கருள் புரிந்த கருணாநிதியாகிய கஜமுகப்பெருமான்

### சோமகாந்தன் உபாசித்தது.

சௌரவநாட்டில் தேவநகரமென்னும் பட்டணத்தில் சோமகாந்தனென்னும் அரசன் அரசுபுரிந்திருந்தபோது அவனுக்குப்பெருவியாதிஉண்டாகியதனால்தன் குமாரன் ஏமகண்டனிடம் அரசை ஒப்புவித்துப் பத்தினி சுதர்மையென்பவளுடன் வனத்திற் சேர்ந்துபிருகுமுனிவரைவணங்கஅவர் அரசனைப்பார்த்து ஞானதிருஷ்டியால் அவன் பூர்வஜெனன விர்த்தாந்தத்தை அறிந்து அம்முனிவர் சொல்லுகிறார். ஓ அரசனே!

பூர்வம்விந்தமலைக்கருகில் கொல்லம் என்னும்பட்டண த்தில் சித்ரூபசெட்டிக்கும் அவன்மனைவி விலோசனைக் கும் நீ பிள்ளையாகப்பிறந்து குடும்பினி என்னும்மனைவி யுடன்கூடிப் புத்திரனைப்பெற்று வாழுநாள், மாதாபிதா க்கள் இறக்க, உனது அளவற்றசெல்வத்தைத் தீமைவழி யிற்செலவழித்தும், திருடிப்பிழைத்தும், குலஸ்திரீக ளைக்கெடுத்தும், குடித்தும், பல துர்ச்செய்கைகளைச் செய்துவந்தாய்; அதனால் அந்நகர்க்கரசன் தண்டிக்க எத்தனிக்கையிற் காட்டிற்சென்று கள்ளரோடுகூடித் திருடித்திரியுங்கால், கனவர்த்தனனென்னும் ஓர் அந் தணன் உன் முன்வர அவனைப்பிடித்து நீவதைசெய்த தால் உன்னைப்பிரமஹத்திதொடர்ந்துவருத்திற்று. அப் போது நீ பல அவதிப்பட்டு வயதுமுதிர்ந்து ஆதரிப் பவரின்றிப்பசியால்வருந்தியிருக்குஞ்சமையத்தில், ஒரு வேதியன் உன்னிடம்வர அவனுக்கு நீ திருடிப்புதை த்துவைத்திருந்த பொன்மணிமுதலியசொத்துக்களில் சிலவற்றைக்கொடுத்தனை; நீசொல்லியனுப்பியபடி பின் னும்சிலவேதியரைஅவனுன்னிடம்இட்டுக்கொண்டுவர உன்னைவந்து பார்த்தமாத்திரத்தில் அவர்கள் நடுங்கி பிரமஹத்தி பிடித்த உன்னிடம் தானம் வாங்க மாட்டோமென்ன, நீமறுபடியும் அவரைப்பிரார்த்தித் ததற்கு ஓர்உறுதிமொழி கூறினார்கள். அதாவது அந் தக்காட்டில் புதர்மூடியிருந்தவிநாயகராலயமொன்றை க்காட்டி இதனைஉன்னிடமுள்ளபொருள்களைக்கொண் டு ஜீர்ணோத்தாரணஞ் செய்வதுவே உனக்கு க்ஷேமத் தையுண்டுபண்ணிஉன்பாபங்களெல்லாம்நீங்கி ஸ்ரீ விநா யகரதுபிரசாதத்தைத்தந்தருளுமென்றுசொல்ல, அவ ர்கள்சொன்னபடியேவிநாயகரைச் சிந்தித்துத்துதித்து ச்சிற்பத்தொழிலில்வல்ல சிலரைக்கொண்டு புதைத்து

வைத்திருந்த அளவற்ற பொருள்களையெல்லாம் எடுத்து அவ்விநாயகராலயத்தைக்கட்டிப் பூர்த்திசெய்து அதற்குரிய நித்தியோத்ஸவம், பிரம்மோத்ஸவங்களையுஞ்செய்து மகிழ்ந்திருக்கும்போது உனக்கு நிரியாணகாலம்வந்து இறந்தனை. அப்போது காலபடர்கள் கொண்டுபோய் உன்னை எமதர்மனிடம் விட அவன்சித்திரகுப்தனால் உனது தீமைகளையும் நீபின்புசெய்ததருமங்களையும் அறிந்து இவன் பாபங்களை மலையைப்போலச் செய்தவனாயினும், ஸ்ரீவிநாயகரது திருவருட்குப் பாத்திரனாய் விட்டான். இவனது சர்வபாபங்களையும் கணநாதரது பக்தியானது நிர்மூலப் படுத்திவிட்டது. ஆகையால் பாவபரிசம்பெற்ற இந்த ஜென்மத்தைப் போக்கி வேறு புண்ணியஜென்மத்தைத்தந்து அந்த ஜென்மத்திற்றானே இவனுக்கு முத்தியைக் கைகூடச் செய்யவேண்டுமென்று தீர்மானித்ததால், சோமகாந்தனென்னும் அரசனாகவந்து பிறந்தனை. நீ செய்தபாபங்களதிகமாயினும் பின்பு நீசெய்த புண்ணியத்தில் அப்பாவம் அடங்கிவிட்டமையால் பாவச்செயல் தலைகாட்டாமற் போய்விட்டது. உன்னுடைய பாபசேஷம் கொஞ்சமிருந்தமையால் அதுவே இந்த ஜனனத்தில் தொழுநோயாகவந்து சம்பவித்தது, அதையும் அநுபவித்துத்தீர்த்துவிட்டனை. இனிக்காலதண்டனை உனக்கில்லையென்று பிருகுமுனிவர்கூறினார். அதைக்கேட்ட அரசன் இப்படியுமிருக்குமோவென மனதிற் சந்தேகித்தபடியால் அத்தட்சணமே அவனதுபாபசேடங்கள் அவன் தேகத்திலிருந்து அநேகமாயிரங் கரிக்குருவிகளுருவமாகப் புறப்பட்டு மேலே கிளம்பித் தாவித்தாவி அவனது தொழுநோய்ப்புண்ணிற் கொத்திக்கொத்தித் துன்பப்படுத்தின, அத்துன்பத்தை அரசன் சகிக்காமல்

முனிவரை அபய மென்றடைந்து வீழ்ந்து துதித்த னன். அம்முனிவர் ஒரு ஊங்கார சத்தமிட்டருள உடனே அந்தப்பட்சிகள் ஆகாயத்திற் பறந்தோடி மறைந்தன. பின்பு முனிவர் தமது கமண்டல தீர்த் தத்தை அவன்மேற் கொஞ்சம் புரோக்ஷித்தவுடன் அவ்வரசன் சரீரத்திலிருந்து கோரரூபத்துடன் ஒரு பேய்வெளிப்பட்டு அட்டகாசஞ்செய்தது. அந்தப்பே யைமுனிவர் நீயாரென்று கேட்க இவ்வரசன் பூர்வஜெ ன்மத்தில், சித்ரூப செட்டியாய் காட்டிலிருக்கும் போது என்னை வேதியனென்றறிந்தும் இவன் கொன் றனன். நானிறந்து பிரமஹத்தியாக இவனை வருத் திக் கொண்டிருந்து இப்போது வெளியாயினே னென்று சொல்ல, அதற்கு முனிவர் இதோ எதிரிலி ருக்கிற மரப்பொந்திற் போயிருவென்று சொல்லியபடி அப்பேய் போக உடனே அந்தமரமும் பேயும் எரிந்து சாம்பராயின. பேய்ரூபம் பெற்றிருந்தவேதி யன் ஒருதெய்வ வடிவந்தாங்கி முனிவரைவணங்கி நிற் கையில் தேவவிமானமொன்று பூமியிலிழிந்தது.அங்கு நின்ற மகாபுருஷன் அந்த விமானத்திலேறிக்கொண்டு ஆகாயவழியாய்ச்சென்று மறைந்தனன். இவ்வதிசயங் களைப் பார்த்த அரசன், முனிவேந்தர் முன்சொல்லி யது சத்தியமென்று பிரத்தியட்சமாகத் தெரிந்துகொ ண்டு அவர் பாதத்தில்விழுந்து வணங்கினன். அப்போ துமுனிவர் ஓ அரசனே! நீபிரதிஷ்டித்த ஆலயத்தொ ண்டுமலைபோன்ற பாவங்களையெல்லாம் தேய்த்துவிட் டது ஆகிலுஞ்சிறிது தொழுநோயாக உன்னைப் பிடி த்திருக்கின்றது; அதுவும் அவ்விநாயகக் கடவுளது மகிமை நிறைந்த பிரபாவங்களைச் சிரவணஞ் செய் தால் அதுவே இந்நோய்க்குப் பரமாவிழ்தமாமெ

ன்று சோமகாந்த மகாராஜனுக்குப் பிருகுமுனிவர் விநாயகப் பிரபாவ முழுவதுங் கூறுதலும் அரசன் முனிவராசிரமத்திலிருந்து கொண்டே அப்பிரபாவத்தைப் பக்திசிரத்தையுடன் நாடோறும் பாராயணஞ் செய்து குருபக்தியிற்சிறந்து விளங்கினான்.

இவ்வாறு நியமமாக விநாயப்பெருமானை நித்தியோபாசனைசெய்திருந்த அரசனது அன்புக்கிரங்கிய அக்கணேசப்பெருமான்கட்டளைப்படி தேவகணங்கள் ஒருவிமானங்கொண்டுவந்து முனிவராசிரமத்தில் இறக்கிக்கணேசவுலகிற்கழைக்கஅரசன்முனிவரைவணங்கிப் பலவாறு துதித்து விடைபெற்றுக்கொண்டு தேவகணங்கள் வேண்டுகோளின்படி ஸ்ரீகணேசரை மனதிற்றியானித்துக்கொண்டு அரசனும் பத்தினியாகிய சுதர்மையும்விமானத்தின் மேலேறினார்கள். உடனே அத்தேவவிமானம் ஆகாயமார்க்கமாய்ச்சென்று தேவநகரத்திற்குச்சமீபமாய் வரும்போது சுதர்மை தன் குமாரன் ஏமகண்டனைக்கண்டு பேசிப்போக வேண்டுமென்று அரசனுக்குத் தெரிவிக்க அதற்கரசன் தேவவிமானத்தை நமதிஷ்டப்படி நிறுத்துவது தகுதியல்ல பெண்ணேயென்று சொல்லினான். அதற்குத்தேவகணங்கள், உன் குமாரன் ஏமகண்டன் விநாயகபூஜையிற் சிறந்திருப்பதால் விமானத்தை நிறுத்தலாமென்று நிறுத்திக் குமாரனை அழைத்து வந்து அவ்வேமகண்டனையும் பட்டணவாசிகளையுந் தேவகணங்கள் பார்த்து உன் புத்திரனும் பட்டணவாசிகளும் விநாயகபூஜையிற் சிறந்திருக்கின்றமையால் அவர்களும் விமானமேறத்தக்க பாக்கியசாலிகளாகவே யிருக்கிறார்கள். ஆயினும் ஏமகண்டனுக்குண்டாயிருக்கின்றதுபோல்பட்டணவாசிகளுக்குஸ்ரீவிநாயகப்பிரசாதம்சித்திக்கவில்லை. அவர்களு

க்கும் திவ்வியபிரசாதசித்தியுண்டாமாறு யாமொருகா ரியஞ் சொல்லுகிறோமென்று நகரவாசிகளைப்பார்த்து தேவகணங்கள் ஒன்று சொல்லுகிறார்கள்.

காசியென்னும் திவ்வியக்ஷேத்திர மொன்றிருக்கி ன்றது அதில்கங்கை வசித்துக்கொண்டிருக்கிறாள். ஸ்ரீ விசுவநாதசுவாமி அந்த க்ஷேத்திராதிபதியாய் எழுந்த ருளி யிருக்கின்றார். அவ்விசுவநாத சுவாமி சன்னிதியில் துண்டிவிநாயகமூர்த்தியும் விளங்கி யிருக்கின்றனர். அந்த க்ஷேத்திரம் இறக்கமுத்தி தருமென்று வேத ங்கள் முழங்குகின்றன. ஸ்ரீபிரணவதாரகத்தை அப்ப தியில் ஸ்ரீவிசுவேசுரர் சகல பிராணிகளுக்கும் வலக்கா தில் உபதேசித்துத் தமது சாரூப்பியத்தைப்பிரசாதிக் கின்றனர். இவ்வதியற்புத க்ஷேத்திரத்தில் சப்தஆவ ரணங்களிருக்கின்றன. அவற்றுள் விநாயகமூர்த்தங் கள் ஐம்பத்தாறு பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றன வெ ன்றுரைத்து இதனடியில்வரும் அவ்விநாயகமூர்த்தங் களின் திருநாமங்களைச்சொல்லி இவ்வைம்பத்தாறு மூர்த்தங்களையும் இவர் திவ்யநாமங்களையும் வாயினு லுச்சரித்தவர்களுக்கும், கேட்டவர்களுக்கும் விநாயக ரது சாரூபமெய்துதற்குரியாரென்று தேவகணங்கள் சொல்லி வாய்மூடுவதன்முன்னர் அத்திருமந்திரங்க ளைக் கேட்டிருந்த நகரவாசிகளனைவரும் தங்கள் அரச னாகிய ஏமகண்டனுடன் தெய்வவுருப்பெற்று விமான த்தின் மேலேற உடனே விமானம் ஆகாசமார்க்கமாக வெழுந்து ஸ்ரீவிநாயகலோகம் போய்ச்சேர்ந்து அங் குள்ள பிரமதகணங்களா லுபசரித்தழைக்கப்பெற்ற சோமகாந்தன்,மனைவி,மைந்தன், மந்திரிகள் மற்றவர்க ளும்ஸ்ரீவிநாயகசாரூபமெய்திச் சிவானந்தவெள்ளத்தி ற்படிந்திருந்தார்கள். இந்தப்படிவிநாயகசரித்திரபிரபா

வங்களைக்கேட்டசோமகாந்தனுக்குப்பெரும்பிணிமுத லிய பாவங்களை ஒழித்து சாரூபந்தந்தருளிய தந்திமு கப்பெருமான்

## தக்கன் உபாசித்தது.

விதர்ப்பநாட்டில் கௌண்டன்னிய மென்னும் பட்டணத்தில் அரசுசெய்திருந்த வீமராஜனும் அவன் மனைவிசாருகாசனியும் புத்திரப்பேறுவேண்டி விஸ்வா மித்திரர் ஆசிரமத்தை யடைந்து தன்குறையைச் சொல்லிக்கொள்ள, நீ மகப்பேறின்றி வருந்துவதற்கு ஒரு காரணமுண்டு அதாவது பூர்வத்தில் உன் ஏழாந்தலை முறையில் வல்லாளன் என்னும் ஓரரசனுக்குக் கமலை என்னும் மனைவியிடத்தில் ஒருபுத்திரன்குருடு,செவிடு, ஊமை, குஷ்டம்இவைகளுடன் பிறந்ததால் வெறுப்ப டைந்தகணவனுத்தரவைத்தட்டாமல் பிள்ளையுடன்கா னகஞ்சேர்ந்து ஒருநாள் எதிரேவந்தமுற்கலமுனிவரது திருமேனிக்காற்றுப் பட்டமாத்திரத்தில் அப்பிள்ளை குருடு முதலிய பழுதுகள் நீங்கிப் பிள்ளையுடன் தானும் அதுமுதல் ஸ்ரீவிநாயகபூசை செய்து வர கணேசர் பிரசந்நமாய் கிருபைசெய்தனர். பின்பும் அநேகநாள் தக்கன் பூசித்துவரும்போது சந்திரசே னனென்னும் அந்நாட்டரசன் காலமாய்விட்டதால் மந்திரிகள் பட்டத்தானையின் கையிற்கொடுத்த பொற் றுமரைமாலையைத் தக்கன் கழுத்திற்போட்டு மகுடஞ் சூட்ட அரசாண்டுவந்தனன். இதுசேதி தன்பிதாவான வல்லாளன் கேட்டுவந்து மகனுடன் கலந்திருந்தான். வீரசேனனென்னும் அரசனது குமாரத்தியைமணந்து பிறந்த பிள்ளைக்கு முறையே ஏழாவது தலைமுறை யில் வீமனுகிய நீ பிறந்தாய் ஆகையால் உனது வமிச த்தாரெல்லாம் செய்துவந்தபடி நீயும் விநாயகபூசை

யைச்செய்துவந்தால்உனது அபீஷ்டங்களெல்லாம் சித்தியாகுமென்று விஸ்வாமித்திரர் சொல்லினர். அப்பொழுது வீமராஜன் இந்திரியங்களிழந்து தேகம் அழுகியிருந்த தக்கனுக்கு இவ்வரியபேறு கிடைத்த வீர்த்தாந்தத்தையும் சொல்ல வேண்டுமென்று கேட்க அம்முனிவர் சொல்லுகிறார்.

## வல்லாளன் உபாசித்தது.

சிந்துதேசத்தில் பல்லியென்னும் பட்டணத்தில் வைசியனான கலியாணனுக்கும் அவன்மனைவி இந்துமதிக்கும் வல்லாளனென்று ஒருபிள்ளை பிறந்து வளர்ந்துஊரையடுத்த தோப்பைச்சென்று, செங்கல்லைப்பிள்ளையாரென்று வைத்துத் தன்னுடனொத்த பிள்ளைகளுடன்கூடி விளையாடி கணபதி ஞாபகம் மாறாமல் தினந்தோறும் பூசித்துவந்தான். இவ்வண்ணம் நாடோறும் பூசைபுரிந்துவந்த வல்லாளனை அவன் தகப்பன் கல்யாணன்வந்து கோபமீறி குடுமியைப் பற்றியிழுத்து ஒரு மரத்திற்கட்டி அடித்து உன் கட்டைப்பிள்ளையாரவிழ்ப்பாரென்றுஉள்ளங்கனமாய்ப்பேசி வீடுபோய்ச்சேர்ந்தான். வல்லாளன் வருந்தி அன்புடன் விநாயகரைத் துதிக்க அவரிரங்கி பிராமணப்பிள்ளையாகவந்து அக்கட்டை யவிழ்த்து மகிழ்வித்துப் பின்னும் தொழுதவனுக்கு விக்கிரகவுருவாகத் தரிசனந்தந்தனர். அவன் பிதா வீடுபோய்ச்சேருவதற்குள் குருடு, செவிடு, ஊமை குஷ்டமுமாகவந்து விழிமூடிக்கொண்டதை இந்துமதிகண்டு தன்பிள்ளையினிடம்வந்து வருந்தியழ, அப்பொழுது வல்லாளன் தன் தாயைத்தேற்றி உனக்கும் என்தந்தைக்கும் மறுஜனனத்தில்இன்னவிதம்நடக்கப் போகிறதென்றுசொல்லி யனுப்பிவிட்டுத் தான்விநாயக பூசையைஇடைவிடாதுசெய்து தியானித்திருந்தனன்.

அவனது தவத்திற்கு விநாயகக்கடவுள் மகிழ்ந்து தேவ கணங்களுடன் விமானமனுப்ப அதிலேறிக்கணேசலோகத்தைச்சேர்ந்து விநாயகர் சரணாரவிந்தங்களையடைந்துவாழ்ந்திருந்தனன். வல்லாளன் தந்தையாகிய கலியாணன் நோயுழந்திறந்தனன். அவனிறப்பதற்குமுன் இந்துமதிபிறந்து கமலையாய்ப் பிறந்து கணவனோடு வாழ்கையில் அவள் வயிற்றில் கலியாணன் பிறந்து பழையரோக பீடிதனாய்த் திரிந்து அல்லலெல்லாந் தீர்ந்து விநாயகப்பிரசாத மெய்தினன் என்று வீமராஜனது சந்தேகத்தைவிஸ்வாமித்திரர்நிவர்த்திசெய்தனர்.

### வீமராஜன் உபாசித்தது.

பின்பு வீமராஜன் முனிவரை வணங்கிப் பிரார்த்திக்க அவனுக்கு அம்முனிவர் உபதேசஞ் செய்தபடி விநாயகரைப் பூசித்துப் பணிந்துகொண்டிருக்க விநாயகர் பிரத்தியட்சமாய் அவன் வேண்டிய வரங்களைக் கடாட்சித்தனர். பின்பு சாருகாசனி வயிற்றில் கருப்பமுண்டாய் ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு உருக்குமாங்கத னென்று நாமந்தரித்துப் பிள்ளைப்பருவஞ் சென்றபின்னர் விநாயக மூர்த்தியினுடைய ஏகாட்சர மந்திரத்தை உபதேசம்பெற்று கணேசமூர்த்தியைப் பூசித்துப்பட்டாபிஷேகஞ்ப் அரசியற்றிக் காட்டிற்சென்று வேட்டையாடி கவிமஹா முனிவராசிரமத்திற் போக அம்முனிபத்தினி முகுந்தை என்பவள் அவனை வலிவிற்றழுவ அதற்கிணங்காததினால் குட்டரோ யுண்டாகச் சபித்தபடி நோயுண்டாக அப்போது அவன் நாரதரைப்பார்த்து உருக்குமாங்கதன் வருந்த நாரதர் சொல்லியது கதம்பவனநகரத்தில் ஸ்ரீவிநயகராலயமும், கணேசகுண்டமென்றொரு தீர்த்தமுமிருக்கிறது. அங்கு நீ சென்று

அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அங்கெழுந்தருளிய விநாயகரைப் பூசிப்பையேல் இக்குட்டநோய் நீங்கு மென்றனர். உருக்குமாங்கதன்கேட்டுக் கதம்பவனத்தி லிருக்கிற ஸ்ரீவிநாயகரை யார் பிரதிஷ்டித்துப் பூசித்தது. அதைச் சொல்லவேண்டு மென்றிரத்தலும் நாரதர் சொல்லுகிறார்.

## இந்திரன் உபாசித்தது.

இந்திரன் அகலிகையை மோசமாகச் சென்று புணர ஸ்நானத்துக்குப் போயிருந்த கௌதமர் வந்து பார்த்து உன்னுடல்முழுதும் பெண்குறிகளாகக்கடவ தென்று சபித்தபடியாக, தேவர்களதை யறிந்துவந்து முனிவரை வேண்டிக்கொண்டதற்கு விநாயகமூர்த்தியி னுடைய சடாட்சரமந்திரத்தை உபதேசித்து விநாயகரைப் பூசிக்கச்சொல்லிய முறைப்படி. இந்திரன் கதம்பவனத்திற் சென்று ஆலயஞ்சமைத்து விநாயகமூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து அன்புடன் பூசித்துப்பெண் குறிகளெல்லாம் கண்களாகப் பெற்று அனேக வரங்களையும்பெற்றனன். இந்நகரத்திற்குக்கதம்பவனநகரம், சிந்தாமணி நகரமென்றும், அவ்விநாயகருக்குச் சிந்தாமணிவிநாயகரென்றும், தீர்த்தத்திற்குச்சிந்தாமணிதீர்த்தமென்றும், கணேசகுண்டமென்றும்வழங்கவும், இதில் முழுகினவர்களுக்கு நான்குபுருஷார்த்தமுங் கிடைக்க வேண்டுமென்றும்இந்திரன் பிரார்த்தித்தபடிவிநாயகக் கடவுள் அநுக்கிரகஞ் செய்தனர். ஆதலால் அந்நகரத்திற்சென்று பூசிக்கின் இக்குட்டநோய் தீருமென்றனர்.

## உருக்குமாங்கதன் உபாசித்தது.

நாரதமுனிவர் சொற்படி. உருக்குமாங்கதன் கதம்பவனநகரஞ் சென்று சிந்தாமணி விநாயகரைத் தியா

ணித்து கணேசகுண்டத்தில் ஸ்நானஞ்செய்து எழுந
தனன். கணராஜர் கிருபையால் குட்டநோய் முழுதுந்
தீர்ந்து காந்தியுடன் விளங்கினான். அப்போது ஆகாய
மார்க்கத்தில் தேவகணங்கள் விமானங் கொண்டுவந்து
நிறுத்தி இதிலேறென்று சொல்லினர். உருக்குமாங்
கதன் ஓர் தருப்பையை முடிந்து தாயுந்தந்தையுமாய்ப்
பாவித்து அத்தீர்த்தத்தில் முழுகுவித்துத் தானும்
நீராடி தருப்பித்துத் தியானித்திருந்தனன். அவனு
டைய சேனைகள் முதலானவர்களும் மூழ்கினார்கள்.
யாவர்க்குந் தனித்தனி விமானங்கள் வந்திறங்கின. அப்
போது உருக்குமாங்கதன் கௌண்டன்னிய நகரமடை
ந்து தாய்தந்தையருக்கு ஸ்நான பலத்தைத் தத்தஞ்
செய்ய அவர்களுக்கும் உடனே தனித்தனி விமானங்
களிறங்கின. அவ்வரச வள்ளல் மந்திரி சாருகாசனி
வீமராஜன் முதலாயினோர்கள் மானிடவடிவு நீங்கித்
தேவவடிவம்பெற்று வந்த விமானத்தின்மீதேறி விநா
யகலோகம்போய்ச் சேர்ந்து சுகித்திருந்தனர்.

இப்படியாக தக்கன், வல்லாளன், வீமன், இந்
திரன், உருக்குமாங்கதன் இவர்களெல்லாம் உபாசிக்க
அவர்களுக்குப் புத்திரப்பேறுதவி குருடு, செவிடு,
ஊமை, குஷ்டம் முதலிய வியாதிகளை நீக்கிச் சாலோக
பதவி தந்தருளிய மகிமையாளன்.

## பிரமதேவன்பூசித்தது.

பிரமன் ஒருகாலத்து சிருஷ்டிதொடங்குமுன்
விநாயகரைப் பூஜிக்காமல் சிருஷ்டித்ததால், தான் சிரு
ஷ்டித்தஉருவங்கள் சரியாயமையாமல் கோணலாயும்
விகாரமாயும்உண்டாகிப் பலவிதசேஷ்டைகளையும்தொ
ந்தரவுகளையுஞ் செய்தன. பிரமன் அவ்வவல சிருஷ்டி

களை அடக்கிச் சரியாய் சிருஷ்டிசெய்ய முடியாமல் வருந்தினவனும் விநாயகரைச்சிந்தித்து நான் முன்னம் தம்மை வணங்காமல் சிருஷ்டிசெய்த பிழையை க்ஷமித்தருளவேண்டும் எந்தையேயென்று துதிசெய்தபோது கஜானனமூர்த்தி தரிசனமாய் என்னையும் எனது சத்திகளாகிய ஞானசத்தி கிரியாசத்திகளையும் தியானித்துச் சிருஷ்டித்தொழிலை ஆரம்பிப்பையேல் அது இடையூறின்றிப் பூர்த்தியாகுமென்று சொல்லியருளலும் அதனை மேற்கொண்டு அவ்விரண்டு சத்திகளையும் தியானித்திருந்தான். ஞானசத்தி கிரியாசத்திகளாகிய சித்திபுத்திகள் என்னும் இருவரும் தரிசனமாயினார்கள். அவர்களைப் பிரமன் வணங்கி எனக்குச் சிருஷ்டித்தொழில் பூர்த்தியாகவும் நீங்கள் இருவரும் எனக்குச் செல்வப்புத்திரிகளாக வந்து அவதரித்தருளவும் வேண்டுமென்றிரந்தான். அதற்கவ் விரு சத்திகளும் இவன் கோரிய வரங்களைக்கொடுத்து மறைந்தார்கள். பின் தான் தரிசித்த சித்தி புத்திகள் இரண்டுபக்கங்களிலும் வீற்றிருப்பதாக மனதிற் பாவித்து அவ்விநாயகவற்புதக்கோலத்தை அன்புடன் தியானித்து சிருஷ்டியை யாரம்பித்தான். அது ஒரு இடையூறுமின்றி நிறைவேறியது. பின் சித்திபுத்திகளும் பிரமனுக்குப் புத்திரிகளாக அவதரித்திருந்தனர். இவ்விதமாக பிரமதேவனுக்கு சிருஷ்டித்தொழிலைக் கடாக்ஷித்த முதல்வர்.

## ஸ்ரீவிநாயகக்கடவுள் திருக்கலியாணம்.

சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமன் தனக்கு சித்திபுத்திகள் புத்திரிகளாகவந்து அவதரித்திருக்கும் அருமையைச் சிந்தித்து மகிழ்ச்சியோடு வாழ்ந்திருக்கையில் நாரதமுனிவர் கைலையையடைந்து சிவபெருமானையும்

உமாதேவியாரையும் வணங்கித்துதித்து அவரருள்பெற்று ஸ்ரீவிநாயகப்பெருமானெழுந்தருளியிருக்கும்சந்நிதானத்திற்குச் சென்று எண்ணிறந்த பிரமதகணங்கள் புடைசூழ இரத்தினசிங்காசனத்தில் கொலுவீற்றிருந்தகோமளக்கொழுந்தை வலம்வந்து வீழ்ந்துவணங்கி வீணையை இசைபடவமைத்து வாசித்துச் சந்தோஷிக்கச்செய்து, எந்தையே! பிரமனது புத்திரிகளாகிய சித்திபுத்திகள் என்பவர்கள் தேவரீரையே மணஞ்செய்துகொள்ள உரியவர்களானதால் அவர்களை மணஞ்செய்துகொண்டு உலகை வாழ்விக்கவேண்டியதென்று விண்ணப்பஞ்செய்தவேண்டுகோட்கு விநாயகப்பிரானிசைந்தனர். உடனேநாரதர் பிரமனிடம்வந்துபணிந்து தான் சென்றுவந்த சுபவரவை விளம்பி விவாககாரியத்தில் பிரயத்தினப்படவேண்டியதென்று தெரிவிக்க, பிரமன் வியந்து ஸ்ரீகைலாயத்தையடைந்து நந்திதேவருத்தரவின்மீது உட்சென்று பரமசிவனையும் உமாதேவியையுந் தெரிசித்து வணங்கி ஸ்ரீகணேசமூர்த்திக்கு எனது புத்திரிகளாகிய சித்திபுத்திகளை விவாகமகோத்ஸவஞ்செய்து ஆநந்திக்க ஆசைப்பட்டேனென்று விண்ணப்பித்து அவர்களுத்திரவுபெற்று ஸ்ரீகணேசமூர்த்தியைச் சென்று பணிந்து திருக்கல்யாணசங்கதியை விண்ணப்பஞ் செய்தனன். கணேசர் அதற்கிசைய அதை விஷ்ணுதேவரிடத்திற் சென்று தெரிவித்துக்கொண்டுதனது சத்தியலோகத்திற்போய் கல்யாணத்திற்குவேண்டிய எல்லாச்சிறப்புகளையுஞ்செய்து நாரதபகவானால் கைலைக்குத்தெரிவிக்க ஸ்ரீவிநாயகரை அலங்கரித்து ஈராயிரமருப்போடும் மலைபோன் றிருக்கின்ற ஐராவணத்தில் ஆரோகணிக்கச் செய்து சிவபிரான், உமாதேவியர், சுப்பிரமண்யர் முதலானவரும் அவரவர்

கள் வாகனத்தி லெழுந்தருளிவர எல்லாத்தேவர்களும் சர்வாலங்காரங்களுடன் சத்தியலோகத்திற்கு வந்து கணேசரைத் திருக்கல்யாண மண்டபத்தி லெழுந்தருளச்செய்தனர். உடனே சரஸ்வதிதேவியார் பொற்பாத்திரத்தில் கங்கைநீர் ஏந்திவந்து ஸ்ரீகணேசமூர்த்தியின் திருவடிகளில் வார்க்க பிரமதேவன் வணக்கத்துடன் அத்திருவடிகளை விளக்கித் திருவாடைகொண்டொத்தினன். பின்பு சித்திபுத்திகளென்னும் கன்னிகைகளை இலக்குமி, அதிதி, இந்திராணி, அனசூயை, அருந்ததி, இரதி என்பவர்களறுவரும் வணங்கி வாழ்த்தி இரத்தினாசனத்தி லெழுந்தருளப்பண்ணி அவ்வன்னையரிருவருக்கும் ஸ்நாநஞ்செய்வித்து பட்டாடைசாத்தி சர்வாபரணங்களும்பூட்டி புஷ்பஞ்சூட்டி அலங்கரித்து இரத்தினச்விசிகையிலேற்றிப் பலவாத்தியங்கள் முழங்கிவர வீதிவலம்வந்து கல்யாணமண்டபத்திற்சேர்ந்து எமதண்ணலாகிய கணேசப்பெருமானது இரண்டுபக்கங்களிலும் வீற்றிருக்கச்செய்தனர். ஜனகமஹாமுனிவரானவர் சங்கற்பஞ்செய்து புண்ணியாகவசனம்புரிந்து ஸ்ரீகணபதிபூஜையைமுடித்து, தேன்கலந்த பால் பழங்கொடுத்து அர்க்கியபாத்திய ஆசமனங்களளித்து பின் சரஸ்வதிதேவியாரால் கணேசருக்குப் பாதபூஜை செய்வித்து அம்மூர்த்தியினது திருக்கரங்களில் பிரமன் தனது புத்திரிகளாகிய சித்தி புத்திகளது திருக்கரங்களைச்சேர்த்து இம்மங்கையரை அங்கீகரித் தென்னை யாட்கொள்ள வேண்டுமென்றுதத்தஞ்செய்துவணங்கினன்.

அவ்விண்ணப்பத்திற்கு கணேசமூர்த்தி அருள்தந் தேற்றுக்கொண்டு அக்கினிபகவான், தவசிகள், தேவர்கள், பிராமணர் முதலியோர்கள் சாக்ஷியாக

திருமங்கிலியந்தரித்து மற்றச் சடங்குகளையும் முறை மைப்படி முடித்த கல்யாணப்பிள்ளைக்கு விஷ்ணு பகவான் கைலாகுகொடுத்து பீடத்திலிருந்தெழுப்புத லும் இலக்குமி முதலாகிய அறுவர்களும் சித்தி புத்தி களைத் தழுவியெடுத்து அவரது சுண்டுவிரல்களை எமது கடவுளாகிய அவ்விநாயகப்பெருமானது சுண்டுவிரல்க ளாற் பற்றச்செய்து சகலரும் புடைசூழ்ந்து போற்றி வர கணேசர் அவ்வோமகுண்டத்தை மும்முறைவலம் வந்து வடபாரிசத்திற்சேர்ந்து கல்யாணப்பெண்களின் பாதங்களைத் தமது அருமைத் திருக்கரத்தாற் றாக்கி அம்மியின்மீது வைத்துப் பதிவிரதாசிரோமணியாகிய வசிட்டமுனிவர் பத்தினி அருந்ததியை எதிரில் வர வழைத்து அவள்மீது திருக்கண்சாத்தியருளித் தேவி மாரோடும் தமது தாய்தந்தைகள் திருவடிகளில் வணங்க அத்தாய்தந்தையர் ஆசீர்வதித்து மனப்பூரிப் பண்டய நவரத்தினமயமான ஆசனத்தில் வீற்றிருந்த போது, எல்லாத்தேவர்களும் கணேசமூர்த்தியையும் சிவபெருமானையும் வணங்கித் தாம்பூலாதிகளை முறை யாகவழங்கிக் காமதேனு சிந்தாமணி பஞ்சதாரு சங்க நிதி பதுமநிதி என்னுமிவைகள் வேறுவேறு உருவங் கொண்டு அங்கு வந்தவர்களுக்கெல்லாம் அவர்கள் வெறுக்கும்படிப் பொருள்களையும்,போஜனாதிகளையுஞ் சொரிய இவ்வாறு திருக்கல்யாணமகோத்ஸவம் நடந்த பின் யாவரும் சிவபெருமானையும் பார்வதிதேவியாரை யும் தம்பதிகளாக எழுந்தருளியிருக்கின்ற விநாயக மூர்த்தியையும் பலமுறை துதித்து அவர்களது திரு வருளைப்பெற்றுத் தங்கள் தங்கள் பதவிகளிற்போய்ச் சேர்ந்தனர்கள். பின்னர் சிவபெருமான் ஸ்கந்தர் முத லாயினோர் புடைசூழ்ந்துவரும்படியாக சித்தி புத்தி

மஞ்ஞூளராகிய கணேசமூர்த்தியை அழைத்துக்கொண்டு பார்வதியாரோடும் கைலைக்கெழுந்தருளியிருந்து பின்பு விநாயகக்கடவுள் தமது உலகத்திற்சென்று எமது அன்னையராகிய சித்திபுத்திகளோடுசகலபோகங்களையு மநுபவித்துக்கொண்டிருந்தனர். இவ்வண்ணம் விவாக விடயமுற்ற நித்யகல்யாணர்.

## விஷ்ணுதேவர் பூசித்தது.

பூர்வம் விஷ்ணுவானவர் பாற்கடலில் பள்ளிகொண்டு அறிதுயில் அமர்ந்திருந்தபோது அந்தகாரத்தின் பயனாக மது கைடவர் என்னும் இரண்டு அசுரர்கள் அவ்விஷ்ணுவின் காதுகுறும்பிகளினின்றும்பிறந்து யாவர்க்குந் துன்பத்தைச்செய்துவர பிரமன்முதலிய தேவர்கள் அத்துன்பினையவ்விண்டுவுடன்சொல்லிக்கொள்ள விஷ்ணுதேவர் படுக்கையினின்றும் எழுந்திருந்து அவர்களோடு எதிர்த்து யுத்தஞ்செய்து சகிக்காமல் ஓர்கந்தர்வனாகி ஓடிமறைந்து ஸ்ரீகைலாயத்தையடைந்து அவ்வரைச்சாரலிலிருந்து சிந்தித்து யாவர் திருவுள்ளமுங் கரைந்திடுமாறு யாழ்வாசித்து நின்றார். அந்த யாழொலியானது சாமகானப் பிரியராகிய சிவபெருமானது செவிகளிற் போய்புக்கது. அதனால் பகவான் சந்தோஷித்து விஷ்ணுவை யழைத்துவரச்சொல்லியபடி கணத்தலைவர்போய் அழைக்கச் சென்று சிவபெருமானைப் பணிந்தெழுந்து பலவாறு துதித்து அவரது அனுஞ்ஞைபெற்று தமது கையிலிருந்த யாழினை எடுத்து இசைபாடவமைத்து வாசித்துப் பெருமானது பெரும் புகழை இனிதுபேசலாயினர்.

பிள்ளை மதியணிந்த பெம்மான் றிருவடியை
பன்னு மவர்கட் குறாதபொரு ளுண்டோ

மெள்ள நறுநெய் விழைந்து விளக்குந்துங்
கள்ள வெலியுங் கடனுலகங் காத்ததே. (1)

ஆத்தி யணிந்த வமலன் றிருவடியை
ஏத்து மவர்கட் கிசையாப் பொருளுண்டோ
சாத்திய வில்லவந் தனக்குத் தளர்முசுவு
மூத்த வறிவின் முசுகுந்த னுயதே. (2)

பேயினத்தோ டாடும் பெருமான் றிருவடியை
காயமுறத் தாழ்வோர்கள் காணுக் கதியுண்டோ
வாயிழையாற் கோவில் வகுத்த சிலம்பியுமோர்
தூயகுலச் சோழனுய்த் தொல்லுலகங் காத்ததே. (3)

என்று சிவபிரானுடைய குணங்களை யெல்லாம் வாழ்த்துதலும் எம்பெருமான் மகிழ்ச்சி கொள்ள மது கைடவர்களைச் சங்கரித்தருளும்படி விஷ்ணுதேவர் விண்ணப்பஞ் செய்துகொண்டனர். அதற்குச் சிவபெருமான் ஒவிண்டுவே நீ விநாயக மூர்த்தியை வழிபட்டுச் சத்துருக்களைஜெயிக்கக்கடவாயென்று ஸ்ரீவக்ரதுண்டமூர்த்திக்கு உவப்புண்டாக்கத் தக்க மந்திரத்தை உபதேசித்தருளினர். பின்னர் விஷ்ணுவானவர் விடைபெற்று பூவுலகின்கண்வந்து ஸ்நானஞ்செய்து திருவெண்ணீறணிந்து விநாயகமூர்த்தியைக் குறைவில்லாமற் பூசித்து மந்திரத்தைத்தியானித்துவர வக்ரதுண்டர் அத்திருமாலுக்கெதிரில் பிரத்யட்சமாய்த்தரிசனந்தர விண்டுவானவர் பலமுறைதுதித்து வணங்கி நீங்காத பக்தியையும் மதுகைடவர் இருவரையுங்கொல்லும் வன்மையையும் அளிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வாறே விநாயகரனுக்கிரகஞ்செய்து நீ நமது சடாக்கரமந்திரத்தைத் தியானஞ்செய்து கொண்டு யுத்தத்திற்குச் செல்லென்று தமதுருவைக்

கரந்தருளினர். பின்பு அவ்விடத்தினின்றும்நீங்கி மது கைடவருடன் யுத்தஞ்செய்து சக்ராயுதத்தைக்கையி லேந்தி ஸ்ரீவிநாயகக்கடவுளது திருவடியை மனதிற் றியானித்து விடுக்க அப்பாதகரினது சிரசைக்கண்டி த்துவிட்டது. விண்டுவினுல் விநாயகப்பிரானைப் பூசி த்ததலத்திற்கு சித்திக்ஷேத்திரமென்றும் அவ்விநாயக ருக்கு சித்திவிநாயகரென்றும் அவ்விண்டுவால் இடப் பட்டநாமம் வழங்கிவருகின்றது. இவ்வண்ணம் விஷ்ணுதேவருக்கு மது கைடரவரைக்கொல்ல மந்திரமநுக் கிரகித்த கடவுள்.

## சமிமந்தார உற்பத்தி.

அவுரவருக்கும் அவர்மனைவி சுமேதைஎன்பவளு க்கும் பிறந்த சமிஎன்னும் பெண்ணை தவுமியமுனிவர் புத்திரன் மந்தாரன் என்பவன் மணந்து மனைவியை அழைத்துக்கொண்டு தனது தந்தை ஆசிரமத்திற்குச் செல்லும்படி வனத்திற்செல்லுகையில் கணேசமூர்த் தியினுடைய சாரூபத்தைப் பெற்றிருக்கிற புருசுண்டி முனிவர் எதிரேவர, அவர்வயிறு தும்பிக்கை முதலிய அவயவங்களைப்பார்த்து நகைக்க, அவர் மரங்களாகக் கடவீர்களென்றுசபிக்க அதைக்கேட்டசமியும் மந்தா ரனும் நடுநடுங்கித்துதித்து பலமுறை வேண்டிக்கொள்ள முனிவர்சிறிதிரங்கி ஏ அபராதிகாள்! நாமிட்டசா பப்படி நீவிர் மரமானபிறகு விநாயகப்பெருமான் உங் களிடத்தில் எழுந்தருளுவர் அப்போது நீங்கள் சிறப் பெய்தி இம்மரவுருவம் நீங்காமலே அவருக்குரிமையா வீர்கள் முடிவில் முத்தியையும் பெறுவீர்களென்றும் சென்றனர். இப்பால் மந்தாரன் மந்தாரைமரமாகவும், சமிஎன்பவள் வன்னிமரமாகவும்இருந்தனர்கள். இவை களைக்கேட்டறிந்த மந்தாரன் தந்தை இவ்வருத்தம்

சகியாமல் இறந்துவிட்டனர். இப்பால் மந்தாரனுக்குக் குருவான தவசிரேஷ்டரான தௌமியமுனிவரென்பவரும், அவுரவரும் மரமாகியவர்களின் சாபத்தை நீக்கும்படி கணேசமூர்த்தியைத் தியானித்து பன்னிரண்டு வருடம் தவமிருக்க, கணேசமூர்த்தி பிரத்தியட்சமாயினர். அவரைமுனிவர்கள் சமியும், மந்தாரனும் மரவுருநீங்கி மனிதவுருவாகுமாறு கிருபைபுரியவேண்டுமென்றிரந்தனர். அதற்கு விநாயகர் நமது பக்தர்களிட்டசாபம் நம்மாற்றீராது. அவர்கள் மரமாகவேயிருந்தெல்லாச்சிறப்புகளையும் எய்துமாறும், யாவரும்வணங்குமாறும், அவர்கள் நீழலில் வசித்திருக்கிறோம். தர்மார்த்தங்களை அடையவேண்டினரும், பலதுன்பங்களை நீக்கிக்கொள்ளவேண்டினரும், அம்மரங்களின் நீழலில் வந்து வழிபடத்தக்கவர்கள். அவ்வன்னிப்பத்திரத்தினும் மந்தாரைப்புஷ்பத்தினும் நம்மை அருச்சிப்பார்களாயின் அவர் வேண்டிய வரங்களைத்தருவோமென்று திருவாய்மலர்ந்தருளி அம்மரங்களின் நீழலின் விநாயகக்கடவுள் எழுந்தருளினர். ஆதலால் விநாயகமூர்த்திக்குரிய அறுகு, மந்தாரை வன்னியென்னும் இவற்றின் பெருமைகளை அளவிட்டுச் சொல்லக்கூடாது. யாகாக்கினியானது அதில் எப்போதும் வாசமாயிருப்பதால் எல்லாப்பத்திரங்களுள்ளும் வன்னிப்பத்திரம் விசேடமானது. அன்றியும் அதனைச்சிவபிரானும் தமதுசடாமகுடத்தி லணிந்திருக்கின்றனர். அன்பர்க்கருள வன்னி மந்தாரை மரத்தடியில் வீற்றிருக்கும் பெருமான்.

## விநாயகசதுர்த்திவிரத மகத்துவம்.

யானைமுகக்கடவுளுக்குரிய மேலான சதுர்த்திவிரதமாவது ஆவணிமாதம் பூர்வபட்ச சதுர்த்தசிதினம்.

அத்தினத்தில் ஓர் பூஜாமண்டபம் சமைத்து பரிசுத்த மான இடத்தில் மிர்த்திகை எடுத்துவந்து குற்றமில்லா தாய்ந்து அதனால் விநாயகமூர்த்தியின் றிருவுருவஞ் செய்துபொன்னினாலுமொருதிருவுருவஞ்செய்துசுத்த கங்கையில் ஸ்நானஞ்செய்து திருவெண்ணீறணிந்து உருத்திராட்சகண்டி தரித்து பூஜாமண்டபத்தில் தண்டுலம்பரப்பி அதன்மேல் இழைசுற்றி நீர்நிரப்பியிருக்கின்றகும்பத்தைவைத்து அதற்கருகில், மிர்த்திகைமூர்த்தியையும்பொன்மூர்த்தியையுமெழுந்தருளச்செய்து ஆகமவிதிப்படி பூஜித்துக் கணபதி மூலமந்திரம் ஜெபித்து தருப்பணம் ஓமம் இயற்றி அன்னதானம் சக்தியினளவுசெய்து அடுத்தமாசம் சுக்கிலபட்சம் வரையில் நாள்தோறும் மேற்சொல்லிய முறைமைப்படி பூஜை செய்து மிர்த்திகையினால் செய்யப்பட்ட விநாயகமூர்த்தியைக் கீதவாத்தியங்களோடு நதியில்வைத்து விட வேண்டும். இவ்வாறு பூஜைசெய்கின்ற முப்பதுநாளும் ஆகாரநித்திரையில்லாமல் விஷயங்களை நிக்கிரகித்து முப்பத்தோராநாள் விருந்து, ஒக்கல், அதிதிகள், பரதேசிகள் முதலானவர்களோடு போஜனம்செய்யவேண்டும். முப்பதுநாள் அநுட்டிக்க சக்தியில்லாதவர்கள் ஆரம்பித்த ஒருநாள் மாத்திரமாவது ஆகாரமுதலியவைகளை நிக்கிரகித்து மேற்சொன்ன முறைப்படி அநுட்டிக்கவேண்டும். எவ்விதத்தேனும் இருபத்தொருபேருக்கு அன்னதானஞ்செய்து வரல்வேண்டும். ஐந்து வருடம் வரையில் பூஜித்தால் எல்லாப்பாதகங்களும் தீரும். இடைவிடாது அந்தியகாலம் வரையில் பூஜிப்பவர் விநாயகர் சாயுச்சியபதவி யடைவார்.

மாசிமாதம் அமரபட்சத்தில் செவ்வாய்க்கிழமை கூடிய சதுர்த்தி சங்கடசதுர்த்தியாகும். அத்திதியில்

கணேசமூர்த்தியினுடைய பாதபத்மங்களை மனதிலி ருத்தி ஏகாக்கரமந்திரம், சடாக்கரமந்திரம், திருநாம மந்திரம் என்னும் மூன்றினையும் தியானித்து அன்ன பனாதிகளை நிக்கிரகித்து சந்திரோதயமானவுடன் விநா யகமூர்த்தியை எழுந்தருளச்செய்து பூஜைமுடித்து சந்திரனுக்கும் அருச்சனையாதிநடத்தி அன்றிரவுமுழு தும் நித்திரையின்றியிருந்து விநாயகரது திவ்விய சரிதங்களைக் கேட்டுக்கொண்டு இருப்பதும் விரதவிதி யாகும்.

சங்கடசதுர்த்தியாவது, மாசிமாதம் அமரபட்சம் செவ்வாய்க்கிழமை கூடிய சதுர்த்தி. அத்தினம்சந்தி ரோதயகாலத்தில் அநுஷ்டித்தவருக்கு எல்லாச் சங் கடங்களையும் போக்கத்தக்கதாக விருப்பதாயும் விநா யகமூர்த்திக்கு பரமசந்தோஷத்தையளிப்பதாயு மிரு ப்பதால் சங்கட சதுர்த்தியென்று சொல்லப்படும்.

இப்படி விநாயக சதுர்த்தி விரதம் இருந்து வழி பட்டு சதுர்வித புருஷார்த்தங்களையும் தாங்கள் வேண் டியவைகளையும் அனேகர் பெற்றனர். விரதமிருந்து அநுஷ்டித்துப் பூசித்தவர்கள் வினைகளைநீக்கும் மெய் யன்.

தேவர் முனிவர் அசுரர் மனிதர் முதலியபலஅன்பர்கள் பூசித்தது.

இன்னும் எமதுதயாவிபவ சாக்ஷாத் பரமபதியா ன விநாயகப்பெருமானை இருச்சமதர்பூசித்து பலவரங் களைப் பெற்றனர். திரிபுரன்பூசித்து மூவுலகையும் அர சாட்சி செய்தனன்.தேவர்கள் பூசித்து திரிபுரன் அழி யும்படி வரம்பெற்றனர். உமையம்மை பர்வதராசனி டத்திலவதரித்தபோது பூசித்து சிவபிரானை மணஞ் செய்துகொண்டனள். சண்முகர் பூசித்து தாருகன்

முதலிய அரக்கரைவென்றனர். கர்த்தமராஜன் பூசித்து செல்வமும், முத்தியையும் அடைந்தனன். நளமகாராஜன்பூசித்து சகலசாம்பிராஜ்ஜியங்களையும் பெற்றனன். சந்திராங்கதன்பூசித்து பேரின்பமடைந்தனன். மன்மதன் பூசித்து தனதுருவைப் பெற்றனன். ஆதிசேஷன் பூசித்து உலகைச்சுமக்க வலிவும் பூஷணமாகவும் பெற்றனன். சூரசேனன் பூசித்து தேவவிமானத்தில்ஏறி விநாயகலோக மடைந்தனன். புருசுண்டி முனிவர் பூசித்து சாரூபம்பெற்று ஜீவன்முத்தி யடைந்தனர். கிருதவீரியன் பூசித்து புத்திரப்பேறு முதலானவைகளைப் பெற்றனன். அங்காரகன் பூசித்து நவக்கிரகபதவி யடைந்தனன். சந்திரன் பூசித்து தனக்குற்ற சாபந்தீர்ந்தனன். எருது, கழுதை, புலைச்சி ஆகிய மூன்றும்அபுத்திபூர்வமாய் பூசித்துப்பலனெய்தி வீடுற்றன. தூர்வையாகிய அறுகின்மகத்துவத்தால் ஜனகர் ஞானத்தைப்பெற்றனர். திரிசிரனும் விரோசனையும் செல்வத்தைப் பெற்றார்கள். விண்டு அவதாரமாகிய வாமனன்பூசித்து மாவலியை வென்றனன். கீர்த்தியென்பவள் பூசித்து மகப்பேறு பெற்றனள். கீர்த்திமகன் பூசித்து விடம் நீங்கப்பெற்றனன். தேவர்பத்தினிகள் பூசித்து சாபம் நீக்கிக்கொண்டனர். கிப்பிரசாதன் பூசித்து வரம்பெற்றனன்.

ஓர் புலைச்சிபூசித்து அவள்பார்வையால் இந்திர விமானம் விண்ணிலெழப் பெற்றனள். பரசுராமன் பூசித்துச் சத்துருக்களை யடக்கி வென்றனன். காசிபர் முதலியமுனிவர் பூசித்து பலவரங்களைப் பெற்றனர்.

இவ்விதமாகத் தன்னை உபாசித்த அடியார்களிச்சையை முற்றும்படி கிருபைபுரியும் எந்தையாகிய தந்திமுகன்.

உபாசனகாண்டம் முற்றும்.

கணபதி துணை.

# லீலாகாண்டம்.

ஸ்ரீவிநாயகக்கடவுள் யுகங்கள்தோறும் அடியா
ரன்பின்வழியே கிருபைபுரிவான் கருதி வேறுவேறு
திருவுருவந்தாங்கித் துட்டர்களை மறக்கருணையாற்றண்
டித்தும், அன்பினர்க்கு அறக் கருணையால் அநுக்கிரகி
த்தும் ஆன்மாக்களை இரட்சித்தருள திருவவதாரங்கள்
பல வெடுத்தியற்றிய திருவிளையாடல்கள் அநந்தமா
கும். ஆயினும் அவற்றில் முக்கியமாக, சிவபெருமானு
னவர் சண்முகக்கடவுளுக்கு அவ்விநாயகப்பெருமான்
வக்ரதுண்டவிநாயகர், சிந்தாமணிவிநாயகர், கஜானன
விநாயகர், விக்னராசவிநாயகர், மயூரேசவிநாயகர், பால
சந்திரவிநாயகர், தூமகேதுவிநாயகர், கணேசர், கணபதி,
மகோற்கடவிநாயகர், உடுண்டிவிநாயகர், வல்லபைவிநா
யகர் எனப் பெயர்கொண்ட அவதாரங்கள் பன்னிர
ண்டுகொண்டியற்றியருளிய திருவிளையாடல்களைக்கூறி
யுள்ளார். அவற்றை ஈங்கெடுத்துச்சொல்லப்புகுந்தாம்.

அப்பன்னிரண்டு திருவிளையாடல்களும் வருமாறு.

## வக்ரதுண்டவிநாயகர் திருவவதாரம்.

பூர்வத்தில் ஒருபிரமப்பிரளய முண்டானபோது
ஒன்றிலொன்றொடுங்கி அப்பிரளயம்நீங்கினவுடன் மு
ன்போலவே ஆன்மாக்களுக்குத் தநுகரணபுவனபோக
ங்களைத்தந்து கன்மங்களைப்புசிப்பித்து மலசம்பந்தமா
யிராநின்ற பாசபந்தங்களைப்போக்கி முத்தியிற் சேர்
க்குநிமித்தம் மீளவும் சிருட்டி, திதி, சங்காரம் என்கிற
முத்தொழிலையும்நடப்பிப்பதற்குத்திருவுளங்கொண்டு
வக்ரதுண்டவிநாயகர் சகளீகரித்து இராசசம், சாத்து
வீகம், தாமசம் என்கிற தமது முக்குணங்களினின்

றும் பிரமன், விண்டு, உருத்திரன் என்னும் மூவர்களுதித்துவருமாறு அவர்கட்கு உருவையும், அறிவையும் உண்டாக்கியருளினர். அவ்வவர்களுற்பத்தியாயின பின்னர் தங்களைப்படைத்தருளிய பரப்பிரம்மமின்னதென் றறியவேண்டுமென்று தேடிக் காணுமல் ஆயிரந்தேவவருடம் தவஞ்செய்தார்கள். அத்தவத்திற்குப் பரப்பிரம்ம சொரூபியாகிய வக்ரதுண்டமூர்த்திக்குக் கிருபைசுரந்து கோடி சூரியப்பிரகாசத்தினும் அதிசோதியை வீசுகின்ற திருவுருவமும், ஆபரணங்களுடன் துதிக்கையும், நீண்டுவளர்ந்திருக்கிற தந்தங்களும், யானைமுகமும், கத்தி, கேடகம், வேல், வில் என்னும் ஆயுதங்களைத்தரித்திருக்கின்ற நான்குகரங்களும், கொன்றைமாலையைத் தரித்திருக்கின்ற அழகியமார்பும், நுதல்விழியுடன் அவர்களெதிரிற் பிரத்தியட்சமாக மூவருந் தோத்திரம்செய்து பிரார்த்தித்தார்கள். மூவர்மீதுங்கிருபைவைத்து நீங்கள் கருதியவரங்களைக் கேட்பீராகவென்று திருவாய்மலர்ந்தருளலும், தேவரீருடைய திவ்யசரணாரவிந்தங்களில் பக்தியும், நாங்கள் நடந்து கொள்ளவேண்டிய பணியையும் கடாட்சிக்க வேண்டுமென்ருர்கள். அதற்கு விநாயகக்கடவுள் சந்தோஷித்து யாவையும் சிருட்டிசெய்யத்தக்க சக்தியைப் பிரமனுக்கும், இரக்ஷிக்கத்தக்கசக்தியை விண்டுவுக்கும், சங்காரஞ்செய்யத்தக்க சக்தியை உருத்திரனுக்கும் கொடுத்தருளினர்.

### சிந்தாமணிவிநாயகர் திருவவதாரம்.

தமிழ்நாட்டில் அபிசித்தரசன் புத்திரனுன கணனென்பவன் காட்டிற்சென்று வேட்டையாடி கபிலமுனிவராசிரமத்தில்வந்து அவரிட்டவிருந்துண்டு, அவ்விருந்து சிந்தாமணியால் அமைத்திட்டது கண்டு, அம்

மணியைப் பலவத்காரமாகக்கவர்ந்துசெல்ல கபிலமுனி வர் அவனுயிருக்கிடையூறுண்டாகும்படி செய்த யாக த்தினின்றும் வேழமுகமும், மலர்ந்ததிருமுகமும், திரி நேத்திரமும், தேசார்ந்த உருவமும்,ஆபரணங்களோடு நான்குகரங்களும், சித்திபுத்திசமேதமுமாக சிங்கவாக னரூடராய் ஸ்ரீவிநாயகமூர்த்தி எழுந்தருளினர். பல துர்க்கனவுகள் கண்ட கணராஜனறிந்துவந்து யுத்தஞ் செய்ய ஸ்ரீவிநாயகர் மழுவாயுதத்தைவிட்டு அவனை மடித்தனர். அவன்பிதாவான அபிசித்தரசன் அச்சிந் தாமணியைக் கொண்டுவந்து கொடுக்க கபிலமுனிவர் ஸ்ரீவிநாயகமூர்த்திக்குத் தரித்தருளினதால் சிந்தாமணி விநாயகரெனவும், கபிலரால் பூசிக்கப்பட்டனவால் கபி லவிநாயகரெனவும், மலர்ந்த திருமுகத்தோடெழுந்த படியால் சுமுகவிநாயகரெனவும் இவ்விநாயகருக்குத் திருநாமம் வழங்கும்.

### கஜானனவிநாயகர் திருவவதாரம்.

பிரமனது கொட்டாவியிற்றோன்றிய சிந்தூரனெ ன்பவன் பிரமனால் பல வரங்களைப்பெற்று விண்டுமுத லிய தேவர்களை வருத்தியதற்கு ஆற்றாராய் ஸ்ரீகணே சரைப் பிரார்த்திக்க விநாயகர், உமாதேவியார் திருவயி ற்றில் கருவாகப்பிரவேசித்து வளர்ந்துவருங்கால்சிவபக் திமுதலியவற்றிற் சிறந்த மயேசுரனென்னும் ஓர் அர சன் நாரதர் சாபத்தால் கஜமுகாசுரனாகப்பிறந்து சிவ பிரானும் உமாதேவியாரும் எழுந்தருளியிருந்த மண்ட பத்தைக்கோட்டினால்முட்டிநிலத்தில் வீழத்தள்ள,சிவ பெருமான் அவன் தலையைத்துணித்தபோது அவன் சிவாயநமவென்று சொல்லி வீழ்ந்ததுகண்டு இரங்கி அவனுக்குச் சாரூபபதமளித்து அவன்றோலை உடுத்தி அவன்றலையைப் பூசித்துவந்தனர். உமாதேவியார் வயி ற்றில் விநாயகர் கருவாக வளர்வதைச் சிந்தூரன்கேட்டு

தேவியார் சுழுத்தியிலிருக்கும் தருணமறிந்து வாயுவடிவா யுள்நுழைந்து அக்கருவின் சிரசைக்கொய்து நருமதைதீரத்தில் வைத்துச்சென்றனன். பின்னர் அக்கரு சிரமிழந்தவாறேவளர்ந்துவர கணேசர் பஞ்சமுகத்தோடும் சித்திபுத்திசமேதராய் உமையம்மையாருக்குத் தரிசனங்கொடுத்தருளி நாமுமக்குப் புத்திரனுயினேமென்றுஉரைத்துமறைந்தவுடன் அங்கே சிரசில்லாததோர் குழந்தை பிறந்திருக்கக்கண்டு வந்து தெரிசித்த தேவர் முதலாயினவரும் கவலைமிக்காராக, அக்குழவி அவர்களுக்குத் தமது சிரமிழந்த காரணத்தைக்கூறி உருத்திரமூர்த்திகளாற் பூசித்திருந்த தலையைத் தாமே வரச்செய்து தமது திவ்விய உடலோடு சேர்த்தருளிக்கஜானனுய் எழுந்தருளியிருக்கும் சமயத்தில், தெரிந்து வந்து அமர்க்கழைத்த அசுரனுகிய சிந்தூரனைவிஸ்வரூபங்கொண்டு துதிக்கரத்தால் எடுத்து சாந்தாகக்குழைத்துத்தமது மத்தகத்திற்ப ரிமளிக்கப்பூசி தேவர்களிடுக்கண்களைத் தொலைத்தருளினர்.

### விக்னராசவிநாயகர் திருவவதாரம்.

இமயமலையின்கண் ணிருந்த சவுபரி என்னும் முனிவர் தமது ஆசிரமத்தைவிட்டு ஸ்நானத்திற்குச் சென்றிருந்தபோது அவர் பத்தினி மனுேமயையையணைய வலிவிலிழுத்த கிரவுஞ்சனென்னும் ஓர் கந்தருவனை அம்முனிவர் வந்து பார்த்து மூஷிகமாகச்சபித்தனர். அவன் சரணுகதியடைய அவனுக்குமுனிவரிரங்கி பராசுவர்ஆசிரமத்தில் அவதரிக்கப்போகின்றஸ்ரீவிநாயகருக்கு வாகனமாகிப் பாக்கியத்தைப் பெறுவாயென்றபடி, மூஷிகமாகத் திரிந்துகொண்டிருந்தனன். அப்படியிருக்க ஏமாவதி நகரத்தில் அபினந்தனனென்னும்அரசன் யாகஞ்செய்ய அந்த யாகத்தை அழிக்கும்படி இங்

திரன் காலரூபி என்பவனை யனுப்ப அவன் அந்தயாகத்தையும், முனிவர்கள்செய்யும் மற்றயாகங்களையும், உலகில் நற்கருமங்களையும் விக்கினஞ்செய்து வந்ததால், முனிவர்கள் விநாயகப்பிரானைப் பிரார்த்திக்க வரேண்ய ராஜனுடைய மனைவி புட்பகையினிடம் ஒரு குழந்தையாகி யானைமுகமும், மழு முதலிய ஆயுதமேந்திய கரமும், துதிக்கரமும், பெருத்த வயிறும் விளங்கியிருந்தனர். அவ்வடிவைப்பார்த்து வரேண்யராஜன் சிந்தனையுடையவனாய் தனது ஏவலரால்மடுக்கரையிற்கொண்டு போய்வைத்தனன். அம்மடுவிற்குச்சென்ற பராசுவமுனிவர்கண்டு அதிசயித்து அக்குழந்தையைமனையிற்கொண்டுவந்து வளர்த்துவரும்போது கிரவுஞ்சனென்னும் மூஷிகமானது அவ்வாசிரமத்தில்வந்து பலகெடுதிகளைச்செய்ய அதைப்பிடித்து அக்குழந்தையாகிய விநாயகர் வாகனமாக ஏறித்திரிந்திருந்தனர். அவரிடம் பராசுவரும், வசிட்டாதிமுனிவர்களும் வந்துவணங்கி காலரூபி என்பவன்செய்யுங் கொடுமைகளை முறையிட்டுக்கொண்டதால், தனது அங்குசத்தை எடுத்தேவி காலரூபி என்னும்விக்கினனை இழுத்துக்கொண்டுவர, அவன் விநாயகப்பிரானிடம் யுத்தம்செய்ய அவன்மீது ஓர்வேலைச்சிருட்டித்து ஏவ அதைக்கண்டு அவன் பயந்து சரணாகதியடைய, அவனை நோக்கி நம்மைத்தியானிக்கிறவர்களிடத்தும், துதிசெய்கிறவர்களிடத்தும், பணிகிறவர்களிடத்தும் ஓர்போதும் நெருங்கற்க! நம்மைவணங்காதவர்கள் துதியாதவர்கள் நினையாதவர்கள் நம்துசரிதத்தைக்கேளாதவர்கள், நமதடியார்களுக் கபகாரம் செய்கிறவர்கள் ஆகிய இவர்களிடத்துநீசென்றுஅனேகமாகத் துன்பஞ்செய்து உன் அதிகாரத்தைச் செலுத்துகவென்று ஆக்கியாபித்து பின்பு அவன் கேட்டுக்கொண்டபடி தமது பெயரின்முன்னேஅவன்பேர் வரு

ம்படி தம்மைவிக்னராஜவிநாயகரென்று யாவரும் துதிக்க அநுக்கிரகித்தனர். அவர் கட்டளையின்படி விக்கினன் துன்மார்க்கரைத்தேடி அவர்களிடத்து வாசமாயினன்.

மயூரேசவிநாயகர் திருவவதாரர்.

சங்காசுரன், கமலாசுரனென்னும் அவுணர்கள் வரப்பிரசாதிகளாய் மாயையி லிருந்தவர்களாய் பிரமனிடமிருந்த வேதபுத்தகத்தைத்திருடிக் கடலிலொளித்துவைக்க, அதைப்பிரமன் சிவபிரானிடஞ் சொல்லிய காலையில் அவரருளியபடி விக்னராஜரைத் தியானித்திருந்தனன். அதற்கு விநாயமூர்த்தி கிருபைகூர்ந்து மல்லாளரென்னும் பிராமணருபமாய் வந்து வேதபுத்தகங்களையுண்டாக்கி உலகெங்கும் பிரகாசிக்கச்செய்து எழுந்தருளியிருந்ததைக்கண்ட கமலாசுரன் அவருடன் யுத்தஞ்செய்யும்படிவர, மல்லாளர் ஓர்வேள்விசெய்து, அளவற்றசேனைகளை யுண்டுபண்ணி அவ்வேள்வியினுதித்த மயிலின்மீது ஆரோகணித்து மயூரேசரென்று துதிக்கச்சென்று கமலாசுரனோடு யுத்தஞ்செய்து தன் சூலாயுதத்தாற் குத்த அவன் வீழ்ந்திறந்தனன். அவனுயிரானது ஸ்ரீவிநாயகமூர்த்தியினது திருவடிகளில் அயிக்கியமானது.

கண்டகநகரத்தில் சக்ரபாணியென்னும் அரசனுக்குச்சிந்துவென்னும் அரசன்பிறந்து சிவபிரானைநோக்கித்தவஞ்செய்து பலவரங்களைப்பெற்று மூவுலகையும் வென்று கொடுங்கோல் செலுத்திவர, தேவர்களெல்லாம் வருந்தி ஸ்ரீவிநாயகமூர்த்தியைத் தியானித்துச் சதுர்த்தி விரதம் அநுஷ்டித்து வந்தனர். விநாயகர் பாலகனுய் ஆறு கரங்களும், மூன்றுவிழிகளும்; விளங்கும்படி தேஜஸான வடிவுடன் உமாதேவியார் எதி

ரில் எழுந்தருளியிருக்க, சிந்துரன்கெட்ட உற்பாதங் களைக்கண்டு ஸ்ரீவிநாயகராகிய குழந்தையால் தனக்கு க்கெடுதிநேரிடும் என்பதையறிந்து அக்குழந்தையை வதைசெய்யும்படி பல அசுரரை அனுப்ப, அவர்கள் பலவித உருக்கொண்டு அனேகவித மாயைகளைச் செய்துவதைசெய்ய எத்தனிக்தகாலையில், அவர்களையெல்லாம் விநாயகப்பிரான் கொன்று முனிவரிட ஆசிரமந்தோறும் பலகுறும்புகளைச்செய்து விளையாட முனிவர் பத்தினிகள் அவர் மகத்துவங்களை அறிந்து அவருக்குப்பூஜைசெய்து அப்பம் மோதகம் முதலிய சிற்றுண் டிகளைவைத்து நிவேதிக்க, கணேசர் இச்சிற்றுண்டிகளை உங்கள் சிறுவர்களுக்குக்கொடுமின்கள் அதனால் எனக் குத் திருப்தியாகுமென்று திருவாய்மலர்ந்தருளினர். அன்றுமுதல் கணேசமூர்த்திக்கு நிவேதித்தசிற்றுண்டி களைத் தங்கள் தங்கள் சிறுவர்களுக்குக் கொடுத்துவந் தார்கள். அதுபோலவே இக்காலத்திலும் விநாயகமூர்த் திக்குநிவேதிக்கிறசிற்றுண்டிகளைத் தங்கள் தங்கள் சிறு வர்களுக்குக் கொடுத்துவருகின்றார்கள். பின்னர் ஓர்வி ஸ்வகர்மன், பரசு, தாமரைமாலை, பாசம், அங்குசம் என் னும் ஆயுதங்களை சுவாமிகள் திருவடிக்குமுன்வைத்து வணங்க அவனைநோக்கி இவ்வாயுதங்கள் யாதென்று வினவ அவன்தனக்குப்புத்திரியாகிய சூரியன்மனைவி சமுசையென்பவள் அவன் சரீரவெம்மைக் காற்றாது பெண்குதிரையாகிப்போக சூரியன்தேடி என்மனையின் கண்வந்தபோது அவனுருவைஆயுதத்தாற்கடைந்தேன். அவன்சாந்தமாகித் தானுமோர் ஆண்குதிரையாய்ச் சென்று தனது மனைவியாகிய பெண்குதிரையைச்சேர அவர்களிடத்து அச்சுவனிதேவர் பிறந்தார்கள். சூரிய னைக்கடைந்து உதிர்ந்தபொடிகளால் சூலாயுதத்தையும்

இவ்வாயுதங்களையும் செய்தேன். சூலாயுதத்தைச் சிவ பெருமானுக்குக்கொடுத்தேன். இவ்வாயுதங்களைத்தேவரீருடைய திருவடிக்கண்வைத்தேன். அடியேன்கிருதார்த்தனாகுமாறு அவைகளைத் தரித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவைகளை அப்படியே அங்கீகரித்துக்கொண்டனர். பின்புவினதை என்பவள் காசிபமுனிவரைக்கூடி ஓர் முட்டையைப்பெற ஸ்ரீவிநாயகமூர்த்தி அங்கெழுந் தருளியதைக்கண்டு காசிபர் சொற்படி அம்முட்டையை விநாயகர்முன் வைத்துப் பணியஅதை விநாயகர்நகத்தால் கீறியவுடன்அதினின்றும் ஒருமயிலுண்டாகி வெளிப்பட, கணேசமூர்த்தியானவர் அம்மயிலின் முதுகில் ஆரோகணித்தருளிமயூரேசரென்ற திருநாமத்துடன் அவ்வினதை வேண்டுகோளின்படி பாதலலோகத்தில் சிறைப்பட்டிருக்கிற மைந்தர்களை விடுவிப்பதாகவரமருளிச்சென்றுஒருபொய்கையில்போய் ஸ்நானம் செய்யும்போது அவண்வந்திருந்த வாசுகியினுடைய புதல்வியானவள் தன்மனையிலெழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கிசைந்து பாதாளலோகத்திற்சென்று அவளால் பூசித்து நிவேதித்தவைகளை அங்கீகரித்து, இறுமாப்புற்றிருந்த அவ்வாசுகியின் சிரோரத்தினத்தைப் பறித்துக்கொண்டதால், அவள்மூர்ச்சையாகியபின் வினதைபுதல்வரைச் சிறையினின்றும்நீக்கி அழைத்துக்கொண்டு எதிர்த்துவந்த வாசுகியை விரலினலெடுத்துக்கங்கணமாகத்தரித்துக்கொண்டு தன்னுடன் யுத்தத்திற்குவந்த ஆதிசேடனை எடுத்து அரையில் நாணாகத்தரித்துத் தன்னைச் சரண்புகுந்த நாகங்களையெல்லாம் அங்கதம், குழை ஆரம் முதலிய ஆபரணங்களாகத் தரித்துப் பூலோகத்தையடைய, தம்முன்வந்து எதிர்த்தசிந்துவை பரசாயு

தத்தால் மார்பைப் பிளந்துகொன்று தமதுலகத்தை அடைந்தருளினர்.

### பாலசந்திரவிநாயகர் திருவவதாரம்.

எமதருமராஜனது வீரியத்தாலுதித்த அனலாசுரனென்னும் அவுணன் உலகிலுண்டான ஜீவர்களை எல்லாம் பிடித்துப் புசித்துத் தேவர்களையும் புசிக்கவந்தபோது பிரம்மவிஷ்ணுமுதலிய தேவர்களும் ஸ்ரீவிநாயகக்கடவுளிடத்து வந்து முறையிட்டுக்கொள்ள, அவர் பிராமணச்சிறுவனுய் வடிவங்கொண்டுவந்து ஒருகவாளமாகஎடுத்து அவ்வனலாசுரனை விழுங்க, அதினுல் அவருக்குஉதரத்தில்வெப்பமுண்டாகஅதனுல் தேவர்களுக்கும் அவ்வாறு வெப்ப முண்டாகியது. ஸ்ரீவிநாயகப்பிரான்வயிறு குளிர்ந்தால் யாவருக்கும் வயிறு குளிருமென்று சந்திரன் சோடசகலைகளிலுள்ள அமுர்தத்தைப் பொழிந்தும், சித்திபுத்திநாயகிகள் தமதுகுளிர்ந்த அவயவங்களை அவர்மீது ஒத்தியும், விஷ்ணுதேவர் அளவற்ற தாமரைமலர்களைக்கொண்டுவந்து தரித்தும், வருணன் சீதளநீரைக்கொண் டபிஷேகித்தும், சிவபிரான் தான் அணிந்திருக்கிற ஆதிசேஷன் முதலிய சர்ப்பத்தை எடுத்தணிந்தும் இவ்விதங்களாகிய குளிர்ச்சிசெய்தும் வெப்பம்நீங்காது பின்னர் முனிவர்கள் யாவரும் ஒவ்வொருவர் தனித்தனியே அறுகைப்பறித்து சுவாமியினது சிரசுமுதல் பாதம்வரைக்கும் அணிந்ததால் ஸ்ரீவிநாயகப் பெருமானுக்கு அவ்வனல்வெப்பம் நீங்க விஷ்ணுமுதலிய தேவர்கள்வெப்பமும் நீங்கின. விநாயகப்பிரான் நமது திருமேனியிலிருந்த வெப்பமானது தேவர்கள்செய்த உபசாரங்களால் நீங்காமல் முனிவர்களருச்சித்த அறுகினுல் நீங்கியபடியால் ஓரறுகாயினுங்கொண்டு எம்மைப்பூசித்தவருக்கு அவர்விழைந்தவரங்

கனைத்தருவோ மென்றருள்செய்தனர். அன்று முதல் விநாயகமூர்த்தியினது பூஜைக்குரிய அநந்தம் பத்திர புஷ்பங்களில் அறுகுசிறந்ததாகியது. பாலவயதுடன் தோன்றி அனலாசுரனை விழுங்கி சந்திரனைப்போல் குளிர்ச்சிதந்தமையால் பாலசந்திரரென்றும் திருநாம மாயிற்று.

### தூமகேதுவிநாயகர் திருவவதாரம்.

மகிபாதினி நகரத்தில் தூமகேது வென்னும் அரசன் அரசியற்றும் கால், அந்நகரத்தில் மாதவராஜன் என்னும் அரசன்மனையில் சுமுதைஎன்பவள் புத்திரனைவேண்டித் தவம்புரிந்து விநாயகரால் வரம்பெற்று வாழுநாளில் சுமுதைவயிற்றில் கருப்பமாய்வளர்கின்ற பிள்ளை உன்னைச் சங்கரிப்பானென அசரீரி உண்டாகியதைத் தூமகேது கேட்டு, சுமுதையை மாய்க்கும்படி அவளையும் அவள் கணவனையும் வீரரால் மஞ்சத்துடன் எடுத்துக்காட்டில் கொண்டுபோய்வைக்க, நித்திரையிலிருந்தவர்கள் விழித்து விநாயகரைத்தியானித்திருக்க அவர்கிருபையால் அளவற்ற வீரர்களுண்டாகி அரசனனுப்பிய சேனைகளை யுத்தஞ்செய்து கொன்றனர்கள். பின்புகுழந்தைபிறந்தவுடன் அதைக்கொல்லும்படி அனேகரை அவண் அரசன் வைத்திருந்தனன். பிரசவகாலம் நெருங்க அக்காட்டில் விநாயகர் ஓர் குழந்தைவடிவமாகி நான்கு கரங்களும், மூன்று விழிகளும், பிரகாசமான அவயவங்களும் பொருந்தவந்து தன் வாயை ஆவெனத் திறந்துகாட்ட அவ்வாயினிடத்தில் சகலதேவர், முனிவர், உரகர், கீழுலகு மேலுலகுமுதலியனவுந் தோன்றக்கண்டு சுவாமியைத் துதித்தனர். இவையனைத்தும் தூமகேது அரசன்தூதரால் கேட்டுத் தமது சேனைகளுடன் [illegible]சென்று அனேக பாணங்களை

விட்டுப் போராட அப்போது விநாயகராகிய குழந்தை தமது திருவாயினின்றும் கொண்டல் கொண்டலாக எழும்பிவரும்படி புகைப்படலங்களைவிட்டு இருண்மய மாக்கி அச்சேனைகளுடன் தூமகேதுராஜனும் பாதலத் தில் வீழ்ந்திறக்கும்படிச் செய்தனராதலால், அன்று முதல் தூமகேது வென்று விநாயகமூர்த்திக்கு நாமம் விளங்கியது.

### கணேசர் திருவவதாரம்.

முகுந்தை என்னும்முனிபத்தினிக்கும் இந்திரனுக் கும் பிறந்த கிரிச்சமதர் கணேசமூர்த்தியைத் தியானித் துக் கண்விழித்துப்பார்த்த பார்வையினின்றும் பலி என்னும் அசுரனுதித்துக் கணேசரைநோக்கித் தவஞ் செய்து பலவரங்களையும் திரிபுரமென்னும் மூன்று கோட்டைகளையும் பெற்றுத் தேவர்களைவருத்தி அரசு செய்துவர, அவனால் தங்களுக்குநேர்ந்ததுன்பங்களைச் சகியாதுதேவர்கள்கணேசமூர்த்தியைத்தியானிக்கஅவ ர்களுக்கெதிரில் பிரத்யட்சமாய் கிருபைசெய்து பிரா மண பிரம்மச்சாரி வடிவமாய் கலாதரனென்னும் பெய ருடன் பலி யென்னும் திரிபுரனிடத்திற்போய் கைலா யத்தில் சிவபிரானால் பூசிக்கப்பட்ட சிந்தாமணி விநாய கரைத்தருவித்துக்கொடுக்க வேணுமென்றுகேட்க திரி புரன் சிவபிரானிடத்தில் அவ்விநாயகரை வாங்கிவரும் படி ஒற்றர்களை அனுப்பச் சென்றனராக, முன்னர் விநாயக மூர்த்தியைப்பூசித்து வரம்பெற்ற தேவர்கள் பின்னர் சிவபெருமானருளைப் பெறவேண்டி ஒவ் வொரு தேவரும் கிகிரி, தட்டு, மச்சு, முதலியவை களாக உருவாகிய ஓர் இரதத்தையுண்டாக்கி அந்த இரதத்திற்கு வேதங்கள் குதிரைகளாகவும், பிரமன் சாரதியாகவும், மேருகிரிவில்லாகவும், வாசுகி நாணை

வும்ஏற்படுத்தி கைலாசத்தைச்சேர்ந்து திரிபுரனுற்படும் அடியேங்கள் கஷ்டத்தை நீக்கியருள இந்த இரதத்தின்மீது எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அச்சமயத்தில் திரிபுரனுலனுப்பிய தூதர்வந்து சிந்தாமணிவிநாயகரைக் கேட்க நாம் கொடோம் யுத்தத்திற்கு வரலாமென்று சிவபிரான் சொல்லி விநாயகமூர்த்தியைத் தியானித்துப் பிரார்த்திக்க, அச்சிவபிரான் முகத்தினின்றும் ஐந்துமுகங்களோடும் தோன்றிநின்றவிநாயகரை அச்சிவபிரான் பிரார்த்தித்துத்துதிக்க அவருக்கு அநுக்கிரகஞ்செய்துமறைந்தனர். பின் தூதர்கள்போய்ச்சொன்னதை திரிபுரன்கேட்டுத் தன்சேனைகளோடும் வந்து சிவபிரானுடன் எதிர்த்துப் போர்செய்ய சிவபிரான் கணேசமந்திரத்தையுச்சரித்துத்திருக்கரத்தில் முத்தலைச் சூலத்தை எடுத்தனர். உடனே யாவரும் திரிபுரன் நீறுனதைக்கண்டார்கள். திரிபுரனுகிய பலி கர்த்தன் திருவடியில் வந்து ஐயிக்கியமாயினன். அன்று முதல் சிவபிரானைத் திரிபுராரி என்னும் நாமத்தால் துதிப்பாராயினர். சிவபிரான் திருமுகத்தினின்றும் ஐந்துமுகங்களோடும் பிறந்த விநாயகருக்குக் கணேசர் எனத் திருநாமமாயிற்று.

### கணபதி திருவவதாரம்.

மாகதமுனிவரும் விபுதையென்னும் ஓரசுரகன்னிகையும் ஆண்யானையும் பெண்யானையுமாகிக் கூடிப்புணர, அப்போது இரண்டுகொம்பும் துதிக்கையுமுடைய கஜமுகாசுரன் பிறந்து சிவபிரானைநோக்கித் தவஞ்செய்து அளவற்றவரங்களைப்பெற்றுத் திரிலோகங்களினும் கொடுங்கோல் செலுத்திவந்தனன். இந்திரன்முதலாகிய தேவர்களும் அரசர்களும் அவனைப் பணிந்து ஏவல் செய்துவந்ததுந் தவிர, இன்றுமுதல் நம்மை

மூன்றுதரம்சிரசில் குட்டிக்கொண்டு செவிகளைப்பிடித்துத்தோப்புக்கரணம் போடக்கடவீர்கள். இதுவே நமக்குஇஷ்டமாகச்செய்யத்தகுந்தவணக்கமென்று ஆக்கியாபித்தனன்.தேவர்கள்அவ்வாறேசெய்துஅவன்கொடுமைக்குப் பயந்து கைலைக்குச்சென்றுசிவபிரானைத்தெரிசித்துத்தங்கள்குறைகளைமுறையிட, அதற்குச்சிவபிரான் நாம் யானைமுகத்தோடுசென்றுஅவனைஅடக்குவோமென்று அத்தேவர்கட்கு விடைகொடுத்தனுப்பிப் பார்வதியாரோடும்அம்மலையின்சமீபத்திலுள்ளசித்திரமண்டபத்திலெழுந்தருளி, அங்கு விஸ்வகர்மனெழுதப்பட்டுள்ளசப்தகோடிமகா மந்திரமாகியசித்திரங்களையும், ஆண்யானையும்பெண்யானையும் புணர்ந்துகொண்டிருக்கும் பாவனையாக எழுதியிருப்பதையும் பார்வதி தேவியாருக்குக்காட்டி,பெண்ணே! முதலிலுள்ளபிரணவாகாரமாகிய இரண்டுயானைகளில் முற்பட்டது திரிமூர்த்திகளையுந் தந்தது. அஃதெனது வடிவமாகும். அடுத்தது சத்திகள் மூவரையும் பெற்றது. அது நினதுவடிவமாகும். ஆதலின் யாம்பிரணவச் சித்திரங்களின் வடிவமாகுது மென்று திருவுளஞ்செய்ய, உமாதேவியாரும் அதற்கிசைந்தனள். அதற்கிறைவர் ஆங்கோர் திருவிளையாடல் செய்ய, அதனால் பிரணவத்தினின்றும் கோடி சூரியப்பிரகாசமாக யானைமுகத்தோடும் விநாயகர் திருவவதாரஞ் செய்தனர்.பின்பு சிவபிரான் கைலைமலைக்கு விநாயகரைக் கொண்டுவந்து மகுடஞ் சூட்டி விக்நவிநாயகரெனப் பெயர் தந்தனர். அக்கைலைமலையின் முதல்வாயிலில் வீற்றிருக்கின்ற கணபதிமூர்த்தியைத்தேவர்கள் யாவரும் வந்து சிவபெருமானுத்தரவின்படி பூசித்துத் தோத்திரஞ்செய்து நாடோறும் வருத்துகின்ற கஜமுகாசூரனைச்சங்காரஞ்செய்தருளல்

வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். விநாயகர் சென்று கஜமுகாசூரனுடன் போராடி அவன் பெற்றிருக்கின்ற வரங்களை யோசித்துத் தனது வலப்புறக் கோட்டின் முனையை ஒடித்து அவன்மீதுவிட்டனர். அதுசென்று கஜமுகாசூரனுடைய மார்பைப்பிளந்து போய் சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்து மீட்டும் சுவாமிகளிடத்துவந்து சேர்ந்தது. அதை ஒராயுதமாகத் திருக்கரத்திலேந்தினர். எம்பெருமானுடைய கோட்டினால் பிளக்கப்பட்டு நிலத்தில் வீழ்ந்த கஜமுகாசூரன் பின்னர் மலைக்கு நிகரான மூஷிகமாகிச் சகலலோகங்களையும் நாசம்பண்ணும்படி நடந்ததை எமது கர்த்தன்கண்டு அதைப்பிடித்து அதன் முதுகிலாரோகணித்தருளினர். விநாயகப் பெருமானுடைய திருமேனி தமது சரீரத்திற்பட்டமாத்திரத்தில், அவனுடைய அஞ்ஞானவிருள் விலகி மெஞ்ஞானவொளி மிகுந்து மேன்மைபெற்றனன். பின்பு தேவர்கள் கஜமுகாசூரனுக்குச் செய்துவந்தபடி விநாயகரிடத்தில் சிரசில் மூன்றுதரம் குட்டிக்கொண்டும், கைகளால் காதுகளை மாறிப்பிடித்துத் தாழ்ந்து தோப்புக்கரணம் போட்டும் விநாயகரை மனமுவக்கச்செய்து இஷ்டசித்திகளை யடைந்து வந்தார்கள். அவ்வாறேஇக்காலத்தில்யாவரும்விநாயகரிடம்குட்டிக்கொண்டு தோப்புக்கரணம்போட்டு வருகின்றனர்.

### மகோற்கடவிநாயகர் திருவவதாரம்.

அங்கதேசத்தில் காத்திரமென்னும்பட்டணத்தில் தேவாந்தகன், நராந்தகன் என்னும் அசுரர்கள் பிறந்து சிவபிரானை நோக்கிஅளவற்றதவஞ்செய்துமூவுலகத்தையுமாண்டு தேவர்முதலியயாவருக்கும் துன்பஞ்செய்துவர, தேவர்கட்கு நற்றாயாகிய அதிதி என்பவள் கண்டு சகியாதவளாய் தன்கணவன் காசிபர் சொற்படி விநாய

கரை நோக்கித் தவஞ்செய்ய விநாயகர் குழந்தை வடி
வங்கொண்டு வந்திருந்தனர். அவருக்கு மகோற்கட
ரென்று நாமகரணஞ் சூட்டி வளர்த்துவர, இப்பால்
நராந்தகனிருந்த பட்டணத்தில் துர்நிமித்தமான உற்
பாதங்க ளுண்டாயினமையால் அதைக் கணிகரால்
தெரிந்து காசிபருடைய மனையிலிருக்கிற குழந்தை
யால் தனக்குக் கெடுதி நேருமென்று அறிந்து ஒர
வுணமாதை யனுப்ப, அவள் அக்குழந்தையையெடுத்து
விழுங்கித் திரும்ப, மகோற்கடர் அவள் வயிற்றிலிருந்த
படி நுதல்விழியைத்திறந்து அழலுண்டாக்கிக்கொல்ல,
பின்னும் நராந்தகனா லனுப்பிய அனேக அரக்கர்கள்
செய்தமாயைகளை நீக்கி அவர்களை மாய்த்தபோது
கைலாயத்தில் சிவபிரானைத் தரிசித்து யாழ்வாசிக்கின்ற
ஆஆ, ஊஊ, தும்புரு என்னும் மூன்றுகந்தருவர்கள்
காசிபர் ஆசிரமத்தில் வர அவர்களை விருந்துண்ணக்
காசிபர் வேண்டவிசைந்து தடாகத்திற் சென்று ஸ்நா
னஞ்செய்து தாங்கள் பிரதிதினம் பூசித்துவருகின்ற
விநாயகர், சிவபெருமான், உமாதேவி, விஷ்ணு, சூரி
யன் என்கின்ற ஐந்து விக்கிரகங்களையும் ஓர் பொற்பல
கையின் மீதிருத்திப் பூசித்து தியானஞ்செய்து கொ
ண்டிருக்கும்போது மகோற்கடர் அவண்வந்து அவ்வை
ந்து முகூர்த்தங்களையும் மறைந்துபோகும்படி செய்ய
அவர்கள் விக்கிரகங்களைக் காணாதவர்களாகி காசி
பருடன் ஆத்மார்த்த மாகிய விக்கிரகங்களை யாரோ
எடுத்துக்கொண்டு போய்விட்டபடியால் எங்களுயிரை
மாய்த்துக் கொள்ளுகிறோமென்று சொல்ல, காசிபர்
துயரமடைந்து தங்கள் சிடர்களைக்கேட்டு மகோற்கட
ரைக் கேட்க, அவர் நகை செய்து தமது வாயினைத் திற
ந்துகாட்டி அவைகளை இங்கேதான் ஒளித்துவைத்

திருக்கின்றேனென, அவ்வாயில் உமாமகேஸ்வரரு டன் கைலாயமும், விஷ்ணுவுடன் வைகுந்தமும், பிரமனு டன் சத்தியலோகமும், இந்திரனுடன் அமராவதியும், அவுணர், நாகர், இயக்கர், மனிதரும், அவர்கள் வசிக் கின்ற எண்ணிறந்த பதிகளும், நதிகளும், வனங்களும், மலைகளும், சமுத்திரங்களும், பதினாலுலோகங்களுமா கிய இவைகள்வெளிப்படக்கண்டுதும்புருவர் முதல்மூவ ரும் அற்புதங்கொண்டு ஆச்சரியமாகி மகோற்கடமூர்த் தியினது திருவடிகளில்நமஸ்கரித்தனர்கள். அப்போது அவ்வைந்துவிக்கிரகங்களையும் தன்னிடத்திலிருந்து எடுத்துக்கொடுக்கவாங்கிப்பூசித்து விருந்துண்டுஅம்மூ வரும் கைலாயஞ் சென்றனர்.

பின்பு காசிராஜன் தன்புத்திரனுக்கு விவாகஞ்செ ய்ய வேண்டி காசிபரிடம் வந்து அவரையழைக்க அவ ரால் அனுப்பிய மகோற்கடரைத் தேரிலேற்றிக் கொ ண்டு அவ்வரசன் காசிநகரம் போகும்போது நராந்த கனுலனுப்பிய அனேக அரக்கர்கள் வந்து செய்த மா யைகளை எல்லாம்போக்கி அவர்களைக் கொன்று காசிப் பட்டணத்தில் அரசன் அரண்மனையைச் சேர்ந்து தம் மைப்பணிந்தவர்க்கெல்லாம் அருள் வழங்கி அரசனு டன் போஜனமுண்டு சிம்மாசனத்தின்மீது எழுந்தரு ளியிருக்கும்போது, காசிபருக்கு விநாயகமூர்த்தி புத் திரராகவரப்போகிறதை முன்னமேதெரிந்து அவரைத் தரிசிக்க, பிரமனெனவன் தருமதத்தனென்னும் பிரா மணனாகவும், சித்திபுத்திகள் அப்பிராமணருக்குப்புத் திரிகளாகவும் வந்து அக்காசிப்பட்டணத்தில் பிறந்தி ருந்தனர். அத்தருமதத்த னென்பவர் அரசனிடம் வந்து கேட்டுக்கொண்டு அவ்வரசனுடன் மகோற்

கடரைத் தன்வீட்டிற் கழைத்துக் கொண்டுபோய் தன்புத்திரியை மகோற்கடருக்கு விவாகஞ் செய்து கொடுக்கப் பெற்று, பின் அங்காசி நகரிலுள்ள யாவரும் மகோற்கட மூர்த்திக்கு விருந்து செய்யக்கருதி அரசனிடம் வந்துகேட்டுக் கொண்டு மகோற்கடரைப் பணிந்து விருந்துக்கழைக்கச் சம்மதித்து யாவரும் விருந்து சமைத்துக்கொண்டிருக்கும்போது சுக்கிலன் என்னும் ஓர் ஏழைப் பிராமணன் நித்திய தரித்திரனுகி விருந்தும், அவரும் கற்பிற் சிறந்த அவர் பத்தினி வித்துருமையும் பிச்சையால் கிடைத்தமட்டும் ஓரதிதிக்குப் பிரதிதினம் அமுது செய்து தாங்களும் புசித்துக் காலந்தள்ளி வந்தவர்கள், அத்தினமும் பிச்சைக்குச் செல்ல, ஒரு வீட்டிலும் ஒரு பிடியரிசியும் போடப்பெருதவராகி வீணுகப் பல வீடுகள் தோறும் அலைந்தலைந்து தமதுமனைக்கண்வந்து பெண்ணே! இத்தினம் கிஞ்சித்தாயினும் பிச்சைகிடைக்கவில்லையாகையால், இதுவரையில் கிடைத்துவந்ததில் எஞ்சியிருப்பது புல்லரிசித்தவிடாயினும் அதைப்பாகமாகச்சமைத்து வைக்கக்கடவை. இத்தினம் இந்நகரத்தாரெல்லாம் மகோற்கடமூர்த்திக்கு விருந்துசெய்யப்போகிறார்கள். யாமும் அவருக்கு விருந்துசெய்யவேண்டுமென்று நந்தனவனத்துக்குப்போய் வன்னி, அறுகு முதலிய பத்திரபுட்பங்க ளெடுத்துக்கொண்டு வந்து வைத்துத் தான் பூஜைசெய்து கொண்டிருக்க அவர்பத்தினி எஞ்சியிருந்த புல்லரிசியை ஆய்ந்து சமைத்து வைத்தனள். முன்னுதாய் சுக்கிலனுடைய புற்கூரை வீட்டின் முன்றிலின்கண் மகோற்கடமூர்த்தி எழுந்தருளிநிற்க அதைச்சுக்கிலன்கண்டு கமண்டலத்தில்ஜலம் கொண்டுவந்து அவர் திருவடிகளில் அபிஷேகித்து,

சிதலையாற்றின்னப்பட்ட ஓர் மணையின்மீது எமது கர்த்தனை எழுந்தருளச்செய்து வன்னி பத்திரத்தாலும், அறுகினாலும், புட்பங்களினாலும் திருவடிகளில் அருச்சித்துப் பலமுறைவணங்கித்துதித்துவெகுநாளாய்ப் பிரிந்து மூடாமல் சூரியகிரணம் பாயும்படியிருந்த ஓரறைவீட்டில் சுவாமியை யழைத்துக்கொண்டு போய் இருக்கவைத்து வித்துருமையால் சமைத்த புல்லரிசிச் சோற்றையும், குழம்பையும், மோதகம் அப்பம்முதலிய சிற்றுண்டிகளையும்ஓர் பரிகலத்தில்வைத்து, ஓ கிருபாமூர்த்தியே! ஏழையடி யேங்களாற் சமைத்து வைத்தஇவ்வுணவைத்தேவரீர் அங்கீகரித்துப்புசித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவர்களன்புக்கு சுவாமி மனமகிழ்ந்து பத்தியோடும் பரிமாறியஉணவுகளையெல்லாம் கிருபையோடும் புசித்துமற்றோரிடத்தில் தர்ப்பைசயனத்தின் மீதெழுந்தருளி யானைவதனமும், பத்துக்கரங்களும், ஏனைய அவயவங்களும் பிரகாசிக்க, இருமருங்கினும் சித்திபுத்தி சமேதராய் சிங்கவாகனமூர்ந்து தரிசனந்தந்தருளினர். அத்தரிசனத்தைக்கண்ட சுக்கிலரும், வித்துருமையும் அளவற்ற களிப்பிலாழ்ந்து பலமுறைபணிந்தெழுந்து பத்தியும் முத்தியும் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ்வாறே அவர்களுக்கு வரங்கொடுத்து மகோற்கடமூர்த்தியாகத் திருவுருக்கொண்டு அரசனுடைய அரண்மனையிலெழுந்தருளியிருந்து திருவமுது செய்தற்கொருமித்து வந்தழைத்தயாவரையும் இலையிடுங்களென்று சொல்லித் தத்தம் வீடுகளில் செல்லுமுன்னம் மகோற்கடப்பிள்ளையார் அவரவர்கள் வீடுகள்தோறும்எழுந்தருள, அவர்கள் உள்ளன்போடுபணிந்து சுவாமிக்கு அமுதுபரிமாற ஆரம்பித்தார்கள். அர

சனதுமனையிலும் யாவர்மனையிலும் திருவமுது செய்தனர். எல்லாருடைய மனைகளிலும் ஏககாலத்திற்றானே ஓர்வீட்டில் போஜனஞ்செய்பவராயும் ஓர்வீட்டில் சங்கீதம் கேட்கின்றவராயும் ஓர்வீட்டில் நாட்டியம் பார்க்கின்றவராயும் இவ்வாறு வீடுகள்தோறும் வேறுவேறாக வேண்டியபடி விளையாடல்செய்து அந்நகரத்தின்கண் ணுள்ளபேர்களுக்கெல்லாம் தமது திருவருளை வழங்கி அளவற்ற பாக்கியங்களையும் அவர்களுக்குக் கொடுத்தருளினர். இவ்வற்புதத் திருவிளையாடல்களை யெல்லாம் பார்த்திருந்த அந்நகரத்திலுள்ளோர் மகோற்கடமூர்த்தியின் கிருபையினையும் அளவற்ற வரங்களையும் பெற்றுவாழ்ந்தனர்.

இப்பால் மறக்கருணையால் கொடியவனாகிய நராந்தகனையும் அவன்தமையனாகிய தேவாந்தகனையும் அளவற்ற யுத்தங்களைச்செய்து சொர்க்கலோகத்திற் கனுப்பினார். அதற்குமேல் காசிராஜன் குமாரனுக்கு விவாகஞ் செய்வித்தருளி அவ்விடத்தினின்றும் காசிபமுனிவராசிரமஞ் சேர்ந்திருந்து காசிபமுனிவரையும் அதிதியையும் கிருபையோடு பார்த்து வேண்டியவரங்களளித்து சித்திபுத்தி முதல் தமது பரிஜனங்களோடு ஆனந்தபுவன மென்கின்ற தமதுலகத்தையடைந்தருளினர். பின்பு காசிப முனிவரும் அவர் பத்தினியும் ஓராலயஞ் சமைத்து மகோற்கட மூர்த்தியைப்போல ஸ்வர்ணத்தினாலே ஓருருவஞ் செய்துவைத்து பிரதிதினம் வேதாகமமுறைப்படி பூஜைசெய்து வந்தனர்கள். அவ்வாறே உலகின்கண்ணுள்ள மற்றையரும் தங்கள்தங்கள் வீடுகள்தோறும் விநாயக மூர்த்தியைப்போல ஒருருவஞ் சமைத்துவைத்துப்பூசித்து நாளதுவரையில் சகலபாக்கியங்களையும் அனுபவித்து வருகின்றார்கள்.

## உடேண்டிவிநாயகர் திருவவதாரம்.

பன்மகவென்னும் பட்டணத்தில் துராஜதனென்னும் அரசன் விஷ்ணுமுதலிய தேவர்களைச்செயிக்கும்படி சிவபிரானைநோக்கி அருமையான தவஞ்செய்து சாகாவரம்பெற்றுத் திரிலோகங்களையும் அடக்கி அரசு நடத்திவருங்கால் தேவர்களெல்லாம் வருந்தி உமாதேவியாரை உபாசித்து துராஜதன்செய்யும் கொடுமைகளை முறையிட்டுக்கொள்ள அதைக்கேட்டஉமாதேவியார் கோபங்கொண்டபோது, தேவியாருடைய முகத்திலிருந்து கோடிசூரியப்பிரகாசமான திருமேனியும், சந்திரஜடாமகுடமும், துதிக்கையோடு கூடிய ஐந்து முகங்களும், பத்துக்கைகளும், கைகள்தோறும் ஆயுதங்களும் கஸ்தூரிப்பொட்டிட்ட நெற்றியும், அளவிறந்த நாகாபரணங்களு முடையவராக வக்ரதுண்டவிநாயகர் திருவவதாரம் செய்தனர். அப்போது உமாதேவியார் கோபமாறி விநாயகரைநோக்கி வருந்துகின்ற தேவர்களைக்காப்பாற்ற வேண்டுமென்றுபிரார்த்தித்தனள். ஸ்ரீவிநாயகப்பெருமான் சிங்கவாகனத்தில் ஆரோகணித்து அளவற்ற பூதசேனைகளோடும் காசிநகரைநோக்கி எழுந்தருளினர். அவர்பின்னர் விஸ்வநாதரும் உமாதேவியாரும் விண்டு பிரமனாதி தேவர்களும் காசிப்பட்டணம் சென்றார்கள். துராஜதனுடைய கொடுமைக்கு ஆற்றாது ஓடிய தேவர்முதலியவரும் காசிப்பட்டணத்தில் விநாயகமூர்த்தியை முன்னிட்டுக்கொண்டு வந்ததை அவுணராஜன் கேட்டுக்கோபங்கொண்டு அவர்களுடன் யுத்தஞ்செய்யும்படி தனதுசேனைகளுடன் வெளிப்பட்டு காசிநகரத்துக்குவந்தனன்.

இதையறிந்து யுத்தத்திற்குவந்த விநாயகமூர்த்திகளுடைய பூத சேனைகளும் அவுண சேனைகளும்

எதிர்த்து அளவற்ற யுத்தஞ்செய்து பின்பு துராஜதரா ஜனும் விநாயகமூர்த்தியும் பெரும்போர் செய்ய, துரா ஜதன் போருக்காற்றுமல் இனிநாம் தப்பி மறைந்து போவதே உத்தமமென்று நினைத்தனன். அதை விநா யகரறிந்து அவனுக்குச் சிவபிரான் கொடுத்தருளிய வரத்தையும் யோஜித்து ஓர் விஸ்வரூபமெடுத் தவனெ திரில்வந்து அவனுச்சியில் ஒருபாதத்தை யூன்றி மற் றொருபாதத்தைக் காசித்தலத்தில் வைத்து ஓஅவண ராஜனே நீ சிவபெருமானிடத்தில் அழியாவரம் பெற் றிருப்பதனுல் இக்காசிப் பட்டணத்துமேற்றிசை வாயி லில் எக்காலத்தும் நமது பாதத்தின் கீழிருந்து பழிபாதகங்களைச் செய்து வருகின்ற துட்டர்களை யடக்கிக்கொண் டிருக்கக் கடவை யென்று அநுக் கிரகஞ்செய்தனர். துராஜதனுனவன் தனதுசிரத் தில் விநாயகமூர்த்தியினுடைய திருவடியைவைக்கப் பெற்றதனுல் உடனே சகலமாயா பாசங்களினின்றும் நீங்கிமெய்ஞ்ஞானச் செல்வத்தைப்பெற்று நித்தியாநந் தசொரூபனுகி அவ்வவர்கள் செய்துவருகின்ற தீமை களையெல்லாம் நிவர்த்திசெய்து கொண்டிருந்தனன். தர்மார்த்தகாமமோட்சத்தையும் எளிதிற்றரவல்ல எம துகர்த்தனுக்கு தேவர்முதலாயினேர் உடண்டிவிநாயக ரென்னும் திருநாமத்தைச் சாற்றித்துதிசெய்தார்கள். அக்காசிநகரமும் உடண்டிநகரமென்னும் மற்றொரு பேரையும் வகித்திருக்கின்றது. இஃதன்றி விஸ்வநாத மூர்த்தி சந்நிதிக்கெதிரே ஐந்துமுகத்தோடு கூடியவக்ர துண்ட மூர்த்தியமர்ந்தருளினர். கோயிலுக்குச்சத்தா வரணமாக ஊர்சுற்றிலும் மற்றைம்பத்தாறு மூர்த்தி களும் வதிந்தருளினர். இந்த ஐம்பத்தாறு மூர்த்திக ளில் ஒருமூர்த்தியைப் பூஜித்தாலும் அவர்கள் சகல

துன்பங்களினின்றும் எளிதில்நீங்கி எல்லாப்போகங்களையும் குறைவறப்பெற்றுச் சுகமாய்வாழ்ந்திருப்பார்

## வல்லபைவிநாயகர் திருவவதாரம்.

சத்தியலோகத்தில் பிரமன் புதல்வருட் சிறந்த மரீசி என்பவர் தந்தையாகிய பிரமனைப்பணிந்து மும்மூர்த்திகளுள் முதல்வராகிய கடவுள் யாரென அதற்குப் பிரமதேவன் பிரம நிச்சயத்தையும் அப்பிரமமே துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யும்பொருட்டு கணேசமூர்த்தியாகத் திருவவதாரங் கொண்டெழுந்தருளியதையும் சிந்தித்து அவ்விநாயகப் பெருமானே முதற்கடவுளென்று சொல்லினன். இவைகளை மரீசிமுனிவர் கேட்டு மானதவாவிக்கரையிற்சென்று கணேசமூர்த்தியை மனதிற்றியானித்து அரிய தவத்தினைச்செய்ய ஸ்ரீகணேசமூர்த்தி மூஷிகவாகனத்தின்மீது தரிசனந்தந்தருளினர். உடனே மரீசி முனிவர் அநந்தமுறைபணிந்து துதிசெய்து தங்கள்வாமபாகத்திலிருக்கின்ற உமாதேவியே எனக்குப் புத்திரியாய் அவதரிக்கவேண்டுமென்றும் இன்னும் வேண்டிய பலவரங்களையும்பெற்று பிரமனையடைந்து அவனால் சிருட்டித்துக் கொடுக்கப்பட்ட பிரமநகரத்தைச்சேர்ந்து இந்திரன் முதலிய தேவரும் தன்னைப்பணிய அரசாட்சிசெய்து தேவவல்லி என்னும் ஒருகன்னிகையை மணந்து ஆயிரம்பிள்ளைகளையும் பெண்களையும் ஈன்று சகலபோகபாக்கியங்களையும் குறைவறப்பெற்றுவாழ்ந்திருந்தனன்.

அப்படியிருக்கஉமாதேவியார் கைலாயத்தில் திருவோலக்கமண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்றபோது எனதிச்சையினாலேயேசகலலோகங்களுமியங்குகின்றதெ

ன்றுகூறியதைக்கேட்டுத்தன்னைப்புகழ்ந்து பேசினளென்று சிவபிரான் உலகங்களிலுள்ள சத்திகளையெல்லாம் தமதிடத்தில் ஒடுக்கிக்கொண்டமாத்திரத்தில் சூரியன் சந்திரன் அக்கினியென்னும் முச்சுடர்களுமொழிந்து அதனாலிரவுபகலில்லாது எத்தொழிலுமற்றதை யுமாதேவியாரறிந்துபயந்துதாம்கொண்டகருத்தை யொழித்துச் சிவபிரானுடையவல்லபமின்றி ஒன்றும் நடக்கிறதில்லையென்று தனக்குள்ளேநிச்சயித்துஅவருடைய திருவடிகளை அனேகமுறைபணிந்தெழுந்து அடியாளறியாமற்செய்த அபராதத்தினைப்பொறுத்துக் காப்பதன்றிப்பழையபடிஉலகத்தையுண்டாக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். சிவபிரான் மனதிரங்க அவர் பெருங்கருணையால் சூரியனாதிமுச்சுடர்களும் உலகிற் பிரகாசித்தனர். இப்பால் உமாதேவியார் பின்னும்கர்த்தனைப்பணிந்து அடியாள்பொருட்டு சகலலோகங்களையும் இருளினால் ஒடுக்கியிருந்தபடியால் அப்பாவம் என்னைவிட்டொழியுமாறு பின்செய்துகொள்ளவேண்டிய பிராயச்சித்தம் யாதோ எனக்கருளவேண்டுமென்றனள்.

அப்பிரார்த்தனைக் கிரங்கிய சிவபிரான் நீ நமக்குமுன் உன்னையே உயர்த்திப்பேசின பிழையால் உலகத்தில் இருள்மூடி சகல ஆன்மாக் களுக்கும் குற்றம் விளைந்தது. நீ சகல ஆன்மாக்களுக்கும் தாயாதலால் குழந்தைக்கு வியாதி நேரிட்டால் தாய் மருந்தருந்துவதுபோல் நீ செய்துகொள்ளவேண்டிய பிராயச்சித்தமாவது, பூலோகத்தில் யமுனைநதியில் ஓர் தாமரைப்பூவில் குழந்தை வடிவமாய்ச் சென்றிருந்து மரீசிமுனிக்குப் புத்திரியாயிருப்பையேல் உன்னையாம்

எழுந்தருளி மணந்துவருவோமென்று திருவாய்மலர்ந் தருளினர். அப்படியே உமாதேவியார் யமுனைநதியில் தாமரைப்பூவில் சங்கவடிவாயிருக்க மரீசிமுனிவரும் மனைவியும் யமுனையில்வந்து ஸ்நானஞ்செய்து சங்க வடிவாயிருந்தது பெண்குழந்தை வடிவாயிருக்கக்கண்டு முனிவர் எடுத்து மனைவிகையிற்கொடுக்க தேவவல்லி தமது கரத்திலேந்தி ஸ்தன்னியத்தில் பால்சுரக்கக் கொடுத்துமனையிற்கொண்டு வந்துவளர்த்து அக்குழந் தையின் வடிவையும் குணாதிசயங்களையும் கண்டு எம தன்னைக்கு வல்லை என்று திருநாமஞ்சாற்றி ஐந்து வயதான உடனே, வல்லை அரியதவத்தைச்செ ய்ய சிவபெருமான் பிராமணவடிவங் கொண்டெழுந் தருளி உன்னைவிவாகஞ்செய்து கொள்ளவந்தேனெ ன்றுசொல்ல, அதற்கு அம்மை கோபித்துப்பேசி அப் பாற்செல்வதற்குமுன் எமதுகர்த்தன் அவ்வுருவத்தினி ன்றும்மாறி கோடிசூரிய ருதயம்போலும் பிரகாசமிக்க தமது நிஜ சொரூபத்துடன் பத்துக்கைகளும் விளங்க அளவற்ற ஆபரணங்களுடன் மயில்வாகனத்தின்மீது மூலகாரணக்கடவுளாகிய கணேசமூர்த்தியாகத் தரிச னந்தந்தருளினர். அத்தரிசனங்கண்டமாத்திரத்தில் அ ன்பும்நாணமும் அச்சமுமுடையவளாய் சுவாமியைப் பலமுறைபணிந்தெழுந்துவலம்வந்து அடியேன் பிழை களைப் பொறுத்து கிருபைசெய்து தேவரீருடைய வாம பாகத்தில் பிரியாமலிருக்க வரந்தர வேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்குக் கணேசமூர்த்தி அவ்வா றே தந்தனமென்று திருவாய்மலர்ந்தருளினர். இவை களையெல்லாம் மரீசிமுனிவர் கேட்டுவந்து கணேசமூர் த்தியைக்கண்டு பணிந்தெழுந்து சுவாமியையும் புத்திரி யையும் அரண்மனைக்கழைத்துவந்து மணக்கோலஞ்

செய்து கணேசமூர்த்தியினுடைய திருவடிகளை யபிஷேகித்து வல்லபையினுடைய திருக்கரங்களைப் பிடித்துக் கணேசர் திருக்கரத்தில்வைத்து தத்தஞ்செய்து வழங்கிமற்றச்சடங்குகளையும் பிரமனால்செய்வித்தனர். கலியாண மஹோத்சவம் செய்துகொண்ட நமதுகர்த்தனாகிய விநாயகமூர்த்தி கிருபாநோக்கம் வழங்கியிருந்தனர்.

அச்சமயத்தில் விண்டுவும்இலக்குமியும்தமது புத்திரிகளாகிய மோதை,பிரமோதை,சுமதை,சுந்தரி,மனோரமை,மங்கலை,கேசனி,காந்தை சாருகாசை, சுமத்திரை, நந்தனி, காமதை என்னும் பேரினையுடைய பன்னிருவரையும் கணேசமூர்த்திக்கெதிரில் அழைத்துவந்து சுவாமி அடியேங்கள் அருமைப் புத்திரிகளாகிய இம்மங்கையரை தேவரீரங்கீகரித்து எம்மை யாட்கொள்ளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குக் கணேசமூர்த்தி அருள்வழங்கி அப்பன்னிருவரையும் மணமியற்றி ஏற்றுக்கொண்டனர். தவத்திற் சிறந்த மரீசிமுனிவர் முதலியசகலரும் வெவ்வேறுவரங்களைப் பெற்று ஆநந்தமடைந்தார்கள். இப்பால் கணேசமூர்த்தியானவர் வல்லபை தேவியாரும் விண்டுவினுடைய புத்திரிகளான பன்னிருவரையும் தமது மருங்கிலிருக்கவைத்துக்கொண்டு பலமங்கள வரிசைகளோடு தமதுலோகமாகிய மணித்தீபத்தினையடைந்து வசித்தருளினர். ஏனையதேவர்கள், முனிவர்கள் முதலாயினோர் வல்லபேசுரரைப்பணிந்து துதிசெய்து விடைபெற்று அவரவர்களிடங்களைச் சேர்ந்து வாழ்ந்திருந்தனர்.

### சிவமஹாபுராணத்திற்கண்ட விநாயகர் திருவிளையாடலின் சரித்திரம்.

சிவபெருமான் இமாசல மன்னன் புதல்வியாகி அவதரித்த பார்வதிதேவியை மணஞ்செய்து அழைத்

துக்கொண்டு திருக்கைலாய கிரியையடைந்து சிறிது காலஞ் சென்றபிறகு ஒருநாள் பார்வதிதேவி தன்தோழிகளாகிய விஜையை, ஜயை என்பவர்களுடன் விளையாடிக்கொண் டிருக்கையில், அத்தோழிகளில் விஜையை யென்பவள் தேவியைப் பார்த்து தாயே சிவபெருமானுக்கு நந்திப்பிரிங்கி முதலிய பிரமத கணங்கள் கணக்கின்றி யிருக்கின்றன. உனக்கு ஒருவருங் காணேம். அவாகளே நமது வாயிலில் சிவாக்கினைப்படி காக்கின்றனர். அவர்கள் நமது சேனையாயினும் சிவ பெருமான் கட்டளையைக் கொள்வதுபோல நம்மிட கட்டளையைக் கொள்ளமாட்டார்கள். ஆதலின் ஒரு சேவகன் நமது மனுஷனாக விருந்தால் நன்றெனச் சொல்லினள். அப்படியே செய்யத் தேவி யெத்தனப் பட் டிருக்கையில் ஒருநாள் பார்வதி யம்மையார் உபசார வஸ்திரத்துடன் நீராடிக்கொண்டிருக்கும்போது சிவபெருமான்உள்ளே செல்லமாதேவிநாணமுற்றுதோழிகூறியது சரிதானென்று தீர்மானித்து கையிற்சலம் கொண்டு உடலிற் றேய்த்துருட்டி தலைவராகிய சிவபெருமானுடைய திருவுருவைத் தியானித்து அதுபோலவே பிரணவஸ்ரூபமும் யானைமுகமும் சதுர்ப்புஜமும் திருநேத்திரங்களும் மங்களரூப முடையவராய் வெள்ளிய வஸ்திரமணிந்து சர்வவியாபியாய் விளங்கும் கணனென்னும் புத்திரனை நியமித்து வாயிற்படியி லிருத்தி நீ யென்னுத்திரவன்றி ஒருவரையும் உள்ளே விடக்கூடாதென்று கட்டளையிட்டு ஒரு தண்டத்தைக் கையிற்கொடுத்து சந்தோஷித்துமுத்தமிட்டு ஆலிங்கனஞ் செய்து ஆசீர்வதித்து அந்தப் புறஞ்சென்ற தாயைப் பணிந்து அதுமுதல் பார்வதியின் கட்டளைப்படி திருவாயிலில் காத்திருந்தனர். இவ்வா றிருக்கையில் மற்றொருநாள் உமாபிராட்டியாரும் தோழியருடன் நீரா

டிக்கொண் டிருக்கும்போது சிவபெருமான் பிரமத கணசகிதமாக தேவியின் அந்தப் புரத்தை யடைந்து உள்ளேசெல்ல யெத்தனிக்கையில்கஜானனர் என்தாய் ஸ்நானஞ் செய்தலின் உள்ளேபோகக் கூடாதென்று தடைசெய்து தண்டத்தை கையிலெடுத்தனர். அது கண்ட சிவபெருமான் யான் யாரென்று நினைத்தாய் உன்னை யிங்கே அமர்த்தினவளுக்குக்கணவன். நானே சிவனென்று கூறிச்செல்ல கணபதி மறுபடியுந்தடுத்து ஓரடியடித்தனர். அதனால் சிவபெருமான் கோபித்து பிரமத கணங்களை விளித்து இவனது துன்மார்க்கத் தைப் பாருங்களென்று சொல்லினர். பிரம்மதர்கள் நீயார் நீயேன் இங்குவந்தாய், உன்வேலை யென்ன வென்று வினவ, கணன் நீங்கள் யார் இங்கே யேன் வந்தீர்கள், தூரமாய்ப் போகக் கடவீர்க ளென்றுகூற அவன் வார்த்தை சொல்வதை யாலோசித்து; அப்பா நாங்கள் சிவகணங்கள், சிவபெருமானது கட்டளையைச்செய்வோர். உன்னை யெங்கள் கணத்திற்குச் சேர்ந்தவனென்று கருதியே வாளாவிருந்தோம். இனி தூரத்திற்செல் இங்கே யிருந்தால் உன்னை இறக்கும்படி செய்வோ மெனச் சொல்லியும், கணன் அங்கேயே துவாரத்தை விடாம லிருக்க பிரமத கணங்கள் சிவபிரான்சொற்படி ஆயுதபாணிகளாய்வந்து சூழ்ந்தனர். அக்கணங்களிலுள்ள நந்திதேவர் கணனுடைய ஒரு காலையும், பிரிங்கி மற்றொரு காலையும் பற்றியீர்க்க எத்தனிக்கையில் அவர்க ளிருவரையும் ஓர் அறைஅறைய கால்களைவிட் டோடினர். உடனே கணன் உறுத்தெழுந்து தன் சமீபத்திலிருந்த இருப்புலக்கையால் சிலர் மண்டையையும், சிலர் கழுத்தையும், சிலர் கால்களையும் அடித்துத்தள்ளினன். அவ்வடியால் சிலர் கீழே விழுந்தார்கள், சிலர் ஓடினார்கள், கணமூர்த்தியால்

அடிப்பட்ட சிவகணங்கள் இத்துவார பாலகனை யெதிர்த்தால் யென்ன விளையுமோ வென்று பயந்தவர்களாய்சிவபிரானையடைந்து,நடந்தவைகளைச் சொல்லிப் பணிந்துநிற்க அவர் சொல்லியபடி பிரமத கணங்கள் மீண்டும் கணபாலனை யடைந்து போர்புரிய யெத்தனிக்க கணரும் எதிர்த்து பலவிதமா யடிக்க அந்தப் புரத்திலிருந்த அம்மையார் பிரமத கணங்களுக்கும் கணபதிக்கும் போர்நேர்ந்ததை அறிந்துபார்வதிதேவி அபிமான முடையவளாய் இச்சிவபிரான்நமதுவாயிலிலிருப்பவனை யேன் தொந்தரை செய்ய வேண்டும், அவனை வேண்டிக்கொளப்படாதோ, நன்றாயிருந்ததென்றும் கூறி மீண்டும் ஒருவரையும் உள்ளே விடவேண்டாமென்று கணனுக்குக் கட்டளையிட் டனுப்பினள். அப்போது இருதரத்தரும் போர் புரிந்தார்கள். அச்சமயத்தில் பிரமதேவன், இந்திரன், விஷ்ணுமூர்த்தி இவர்களும் கேள்வியுற்று உதவியாக வந்தவர்கள் சிவபெருமானைப் பணிந்து யெங்கட்கு விடைகொடுத்தாற் போர் செய்கிறோம் யெனக் கூறுகையில் கணனால் அடிப்பட்டுவந்து முறையிடும் சிவகணங்களைப்பார்த்து வருந்தி சிவபெருமான், பிரமனே நீயவனிடஞ்சென்று போர் நிகழாவண்ணம் அவனை இதவார்த்தையால்சுவாதீனஞ்செய்ய வேண்டுமெனை, பிரமன் சிலருடன் கஜானனரிடம் வருகையில் அவன்மீசையைப்பிடித்துப்பறிக்க ஓடிப்போயினன். பின்பு சுப்பிரமணியர் பிரமத கணங்கள் யாவரையும் போர்க்குச் செல்ல சிவபிரான் உத்திரவளித்தபடி போர் செய்தனர்கள். அந்தச்சமயத்தில் அந்தப் புரத்திலிருந்த பார்வதிதேவி இரண்டு சத்திகளைச் சிருஷ்டித்து அனுப்பினள். அச்சத்திகள் அமரர்விடுத்த அஸ்திரங்களை வாய்திறந்து உண்டுகொ

ண்டிருக்க கணன் ஒருவனேதேவர் முதலியவர்களையும் கணங்களையும் அடித்துக் கலக்கலாயினன். அதினல் யாவரும் மனங்கலங்கி வருந்துகையில் சிவபெருமான் வெகுண்டு தேவர்களுடனேயும் கணங்களுடனேயும் யுத்தத்திற்குவர அப்பொழுது நாரதர் சிவபெருமானைப் பார்த்து சுவாமி அவன் கொல்லத் தக்கவனல்லன் அவனை வசப்படுத்தினல் க்ஷேமம் உண்டாகும் யெனக் கூற அதையுங் கேளாமல் சிவபெருமானும் வந்து யுத்தஞ்செய்து பாசத்தால் கணனைக் கட்டி மூர்ச்சை செய்வித்தனர். அதைப் பார்வதி தேவியார் கேள்விப் பட்டு பெருங்கோப முடையவளாய் அனேக ஆயிரஞ் சத்திகளை யுண்டுசெய்தனள். அவர்கள் பலவாறு யுத்தஞ்செய்யும் சமயத்தில் ஒருசத்தி சிவ பெருமானை இடுப்பிலடிக்க சிவபெருமான் மிகவருந்த யாவரும் பிரமித் திருந்தார்கள். நாரத முனிவர் அப்போது யாவருக்கும் சுகத்தை யுண்டுபண்ணக் கருதி சிவபிரானுடைய உத்திரவினல் சிலரிஷிகளுடன் பார்வதி தேவியாரிடஞ்சென்று பலவாறு தோத்திரஞ்செய்து திருவடியிற் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தாயே சிவபெருமானும் நாங்களும் மிகுந்த கஷ்டத்தை யடைந்தோம். சம்மாரத்தை நிறுத்தவேண்டும்சாந்தமடையவேண்டும் க்ஷமிக்கவேண்டும் யென்று பிரார்த்திக்க, பார்வதா தேவி அவர்கள்விஷயத்தில் தயவுசெய்து யென் புத்திரன் மூர்ச்சைதெளிந் தெழுந்தபிறகு சம்மாரம்நீங்கும் மேலும் உங்கள் யாவராலும் பூசிக்கப்படுபவனய் சகலருக்கும் முதற் கடவுளா யிருந்தாலன்றி சுகமடையமாட்டீர்களெனக் கூற அவர்கள் யாவரும் சிவபெருமானும் பார்வதியின் விருப்பத்தின்படி நடக்கவேண்டுவதே நலமெனத் தீர்மானிக்க சிவபெருமானல் உயிர்த்

தெழுந்து தேவர்முனிவர்பிரமதகணங்கள்யாரும் உயிர் பெற்றனர். கணனை சிவபெருமான் பார்த்துவருந்திபா சத்தை அகற்றி தமதுகையாற்றடவினர். கணன் அக்க ணமேயெழுந்தனன். எழுந்தசுந்தராகாரமுடைய கண னைகணத்தியட்சர்களா யிருக்கும் விஷ்ணுவாதி தேவர் யாவரும் கணநாதனுக யிருக்கும்படி பட்டாபிஷேகஞ் செய்து வஸ்திராபரணலங்கிரதத்துடன் களிகொள் ளும்படி பார்வதாதேவியிடம் அழைத்துக்கொண்டு போய் காண்பித்தார்கள். பார்வதாதேவி மிகக்களித்து ஆசிர்வதித்து இதுமுதல் யாவராலும் முன்னம் பூசிக் கத்தக்கவ னுகவென்று சிவபெருமானது திருத்தொ டையின்பேரில் விநாயகரைக் கொண்டுவந்து உட்கார வைத்தனர். சிவபெருமான் தேவர்களைப் பார்த்து இவன் னென்பிள்ளையெனக் கூறக் கணேசர் சிவபெரு மானது திருத் தொடையினின் றிழிந் தெதிர் நின்று சிவபெருமானையும் பார்வதா தேவியையும் நமஸ்கரித் தனர். சிவபெருமான் விஷ்ணுவே பிரமனே நாம் உல கத்திற் பூசிக்கப்படுவதுபோல இக்கணேசனும் யாவ ராலும் பூசிக்கப்படவேண்டும் அன்றியும் இவ்விநாய கனை முதற்பூசித்து நம்மைப் பின்னுல் பூசித்தால் தான் நாம் மனமகிழ்வோம் இவனைப் பூசியாதவர்கட்கு காரி யங்கள் சித்தியாகாதென்று கூறினர். அதன் பின்னர் சிவபெருமான் விஷ்ணுதேவர் பிரமதேவன் பார்வதிதே வர்கள் யாவரும் சந்தோஷத்துடன் பூசிக்க கணேசர் சகலருக்கும் பிரபுவாக எழுந்தருளியிருந்தனர்.

இவ்வித புகழ் மிகுத்த திருவிளையாடல்களை யியற்றித் தம்மை யுபாசித்து வழிபடு மெய்யன்பர்க் கருள்செய்யுந் திருநோக்கத்துடன் எவ்விடத்தும் நீங்

காமல் பரிபூரணராய் விநாயகப்பிரான் எழுந்தருளுவர் அவர் எழுந்தருளாத இடமில்லை.

நிஷ்களமாய் எங்கும் நிறைந்திருந்தாலும் திவ்விய மங்கள யானை முகங்கொண்ட சகளமாகிய விக்கிரகத் திருவுருவத்தில் பதிப்பொருளான விநாயகக்கடவுள் சாந்நித்தியமாக விளங்குவர். சிவபிரான் முதலிய எந்தக்கடவுளைத் தொழவேண்டிய வரும் முன்னம் விநாயகரைத் தொழுதே பின்பு அக்கடவுளைத் தொழவேண்டியதற்காகவே எந்த ஆலயங்களினும் விக்கிரகத் திருவுருவமாக முன்னர் விநாயகர் எழுந்தருளியிருக்கின்றனர்.

இப்பூவுலகின்கண் சத்த சமுத்திரங்களும் மேருகிரி முதலிய பர்வதங்களும், கங்காநதி முதலிய புண்ணிய தீர்த்தங்களும், விசித்திரமான பல புண்ணிய வனங்களும் விளங்கியிருக்கின்றன. அவ்விடங்களிலெல்லாம் மஹாமூர்த்தியான விநாயகர் அற்புதத்திருவுருவத்தோடும் எழுந்தருளியிருப்பர்.

கண்டாலும் - கேட்டாலும் - சொன்னாலும் - நினைத்தாலும் - புனிதமாக்கி இஷ்டசித்திகளைக் கூடப்பெற்றதாகிய பிரிதிவிஸ்தலமான காஞ்சிபுரி-அப்புஸ்தலமான சம்புகேஸ்வரபுரி-தேயுஸ்தலமான திருவண்ணாமலை - வாயுஸ்தலமான திருக்காளத்தி- ஆகாயஸ்தலமான சிதம்பரக்ஷேத்திரம் என்னும் பஞ்சபூதஸ்தலங்களிலும், சிவபிரான் பிரமன் சிரங்கொய்த திருக்கண்டியூர்-அந்தகாசூரனை எரித்த திருக்கோவலூர்-திரிபுரம் எரித்த திருவதிகை-தக்கன் முடி தறித்த திருப்பறியலூர் சலந்தரனைத் தலையரிந்த திருவிற்குடி-யானையையுரித்த திருப்பழூர்-மன்மதனைத் தகனஞ்செய்த திருக்கொ

றுக்கை-யமனை உதைத்த திருக்கடவூர் என்னும் அஷ்டவீரட்டத் தலங்களிலும், தேவலோகத்தின்கண்ணிருந்துவந்த விடங்கமூர்த்திக ளெழுந்தருளிய திருவாரூர்-திருமறைக்காடு - திருநள்ளாறு - திருக்காராயல் - திருநாகை - திருவிளமர் - திருக்கோளிலி - என்னும் சப்தவிடங்கத்தலங்கள் ஏழுடன் திருக்கச்சூர்-திருவான்மியூர்-திருவொற்றியூர்-என்னும்மூன்றுஞ்சேர்ந்தபத்துத்தியாகத்தலங்களிலும்,சித்திரசபைகுற்றாலம்-இரத்தினசபை திருவாலங்காடு பழையனூர் - தாம்பிரசபை திருநெல்வேலி - இரசிதசபைமதுரை-பொற்சபைதில்லை என்னும் பஞ்சசபாஸ்தலங்களிலும், இன்னும் சிவபிரான் காருண்யமாயெழுந்தருளியிராநின்ற காசி இராமேச்சுரம் திருமுதுகுன்றம் சீகாழி திருக்கழுக்குன்றம் திருமயிலை முதலிய பல அற்புதத் திவ்வியக்ஷேத்திரங்களி லெல்லாம் மஹாலிங்க மூர்த்தியாகிய சிவபெருமானுடன் முற்பூசனையைக்கொண்டு ஆங்காங்கு பல திருநாமங்களுடன் விநாயகப்பிரான் அருள்வடிவாக விளங்குவர்.

சர்வேசனும் சர்வஞ்ஞனும் அநாதியும் பரிபூரண சொரூபியும் மங்களாகரனும் எல்லாரையும் பவத்தினின்று ரக்ஷிப்பவனும் - ஆதிமத்தியாந்த ரகிதனும் சிவாகமங்களா லறியத்தக்கவனுமாகிய ஸ்ரீ விநாயகப்பிரான் எங்கும் எவ்விடத்தும் உளனென்று வேதாகமங்களும் முறையிடுகின்றது.

இப்படி எங்கும் சிவசொரூபமாகி எழுந்தருளியிருப்பவராகிய விநாயகக்கடவுள் சர்வவியாபியாகி எவ்விடத்தும் எல்லாப்பொருள்களிலும் நிறைந்து விளங்குகின்றாராதலின் அப்பகவானை மண், கல், மரம், மணி உலோகங்கள் முதலிய எல்லாப்பொருள்களிலும்

பூசிக்கத்தகும். பசுவின்சாணம் மஞ்சள் திருவெண்ணீறு சந்தனம் சருக்கரை முதலியவைகளாலும் அமைத்துப் பூசிப்பதுண்டு. எல்லாப்பொருள்களிலும் விநாயகக்கடவுள் நிறைந்திருப்பினும் விக்கிரகங்களில் அவர் நிறைந்திருப்பதோடு அவரது விஸ்வரூபமும்பிரகாசமாகின்றது.

வியாபகத்தினால் உள்ளும் உருவத்தினால் வெளியிலும் நிறைந்திருப்பினும் விக்கிரகத்தில் மந்திரகிரியாவிசேடமுமுண்டு. அது அவருக்குத் திருமேனிகளாயின. ஊனக்கண்ணுக்கு எட்டாத விநாயகர் விக்கிரகசொரூபமாகநேரே நேத்திரத்துக்கும் நேத்திரவழியாகமனசுக்கும் எட்டுகிறபடியால் அவ் விக்கிரகங்களில் விநாயகரைக்கண்டு தெரிசித்தவர் ஆனந்திப்பர்.

விக்கிரகத்தில் வேறுகாது விரவிய விநாயகருருவத்தை யன்றோகண்கள்கண்டு ஆனந்திக்கின்றன.

ஞானிகளுக்குத்தயிரில் நெய்போலவும் ஏனையோருக்குப்பாலில்நெய்போலவும் விக்கிரகங்களில்விநாயகர் விளங்கி அனுக்கிரகிப்பது சத்தியம்

விநாயகர் விளங்கியிருந்து அடியார்கள் செய்யும் பூசையை ஏற்குமிடம் விக்கிரகமேயாம்.

திருக்கோயில்களில் விநாயகரை விக்கிரகரூபமாகப்பிரதிஷ்டித்து பூசை, அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, ஆராதனை, பிரதக்ஷணம், நமஸ்காரம், வந்தனம் இவையாதி உபசாரங்களோடு நடத்திஅவர்குணரூபங்களைவர்ணித்து தியானித்துப் புண்ணியந்தேடி அனுபவிப்பவர்களே அறிவினையுடையபெரியோர்கள். சோம்பேறித்தனத்தால் வீண்பேச்சுக்களைப்பேசி காலங்கழித்து இறப்பர் அறிவீனர்கள்.

சிவஞானிகளும் தடையற்ற ஞானத்தால் பரனை சாக்ஷாத்காரமாக அனுபவிக்கிறபோது விக்கிரகங்களை வணங்குவது அவர்கள் கரணேந்திரியங்களுக்குப் பிரயோசனமாகும்

விநாயகப்பிரானை விக்கிரகத்தில் கண்ணாற்றெரிசித்தும், வாயினாற்றுதித்தும், காதினால் அவர்கல்யாண குணங்களைக் கேட்டும், மனசாரக்கருதியும் இந்திரிய கரணங்களால் இடைவிடாது உபாசித்தால் மலஞ் சிறிதுசிறிதாய் நீங்கி ஞானமுஞ் சிறிதுசிறிதாய் விளங்கும்

விநாயகப்பெருமானை விக்கிரகத் திருமேனியாகத் தரிசிப்பது ஸ்வரூப ஆராதனமென்றும், அவரது ஸ்வரூபங்களையும், நாம வைபவங்களையும் உள்ளத்திற் கொண்டு மகிழ்வது தியானவைபமென்றும் மேலான பெரியோர் அனுட்டித்து வருவர்

விநாயகரது விக்கிரக ஆராதனையை வேண்டாத போது அவரது தியானவடிவு கைகூடாது

ஒருகோயிலைக் காணும்போதுதெய்வத்தினது சிந்தனையுண்டாகின்றது தனது அகங்கார மமகாரங்கள் ஒழிந்து பத்திசெனிக்கின்றது. திருக்கோயிலுக்குப் பெருமை அதிலெழுந்தருளியிருக்கும் விக்கிரகத்திருமேனியேயாம். விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்புமலர் காய்கனி போலன்றோபரா பராபரமே, அரும்புமலரைக் கிள்ளியெறிந்து பழம்பறித் துண்பேன் என்றதுபோல, சரியை, கிரியைகளை நீக்கி ஞானமாத்திரங் கொள்ளலாகாது.

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை

என்னுந் திருமந்திரத்தின்படி மரநாட்டத்தைக் கழித்து,யானையைநாடல் போல் கல் செம்பு நாட்டத்தைக் கழித்து விநாயகக்கடவுளை நாடுவர்மேலோர்.

பிரமன் விண்டுவாதிகளும் விக்கிரகத் திருவுருவையுபாசித்தே சர்வ ஐசுவரியங்களையும் அடைந்தனர். அவர்களால் உலகில் பிரதிஷ்டைசெய்து பூசித்த விக்கிரகத் திருவுருவங்கள் திருக்கோயில்க ளனந்தமாயுள்ளன,ஈசுரவாக்கியமாகிய வேதமும் விக்கிரக ஆராதனை முதலியவைகளை மிக வெடுத்துரைக்கின்றது.

விக்கிரகமேயன்றி திருக்கோயில் விபூதி ருத்திராக்ஷம் - வில்வம் அறுகு சிவவேடம் முதலிய சிவமுத்திரைகளும் சிவபாவனைக் குரியஸ்தானங்க ளாய்ச் சிறக்கும்.

இதுபற்றிய விசேடத்தாலும் விக்கிரகங்கள் விநாயகக் கடவுளாவதில் என்னதடை; அவ்விநாயகப்பிரானின்மகிமை முற்றும் அறியபுண்ணியம் போதாமையால் திருக்கோயிலையும் விக்கிரங்களையும் குறைவாக நினைப்பது நினைப்பவரது தீவினையேயன்றி வேறில்லை.

திவ்வியக்ஷேத்திரங்களையும்விக்கிரகத்தையும்நிந்தை செய்யும்பே ரடையுங் கதியைச் சொல்லவேண்டுமோ.

விக்கிரகநிந்தையால் சிக்ஷையும் விக்கிரக சிந்தையால் ரக்ஷையும் உண்டாகும்.

விநாயக பூசையில்லாத சென்மத்தைச்சுடு; விநாயகராலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து என்றுஞ் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ விநாயகக்கடவுளது அர்ச்சாரூபமாகிய திருவுருவத்தில் பூசை அபிஷேக முதலிய உபசாரங்களைச் செய்வது கிரியாயோகம். இதுவே விநாயகப் பெரு

மானைத் தியானிப்பதற்கு முக்கியமான சாதனம். விக்கிரகங்களை யோகிகளும் மனதிற் றெரிசித்தவகையாகவே நிர்ம்மாணஞ் செய்யப்பட் டுள்ளது. அக்கினிகாரியஞ்செய்பவனுக்கு அக்கினியிலும்,அன்பர்களுக்குஅவாளிதயத்திலும்,கிரகாசீர்மத்தவர்களுக்கு விக்கிரகங்களிலும்,ஞானிகளுக்கு எல்லாப்பொருள்களிலும் பகவான் விளங்குவதாகக் கொள்கை. எந்தவகையாகிலும் விநாயகக்கடவுளை அன்புடன் பூசித்தவர்களுக்குத்தக்கபலன் கிடைக்கும். தேவர்களாலும் அர்ச்சித்தற்குரிய சகளத் திருவுருவமான விநாயகக்கடவுளை பால், தயிர், நெய், பஞ்சாமிர்தம், கோரோசன முதலியவற்றால் அபிஷேகம் அர்ச்சனை தியானமுதலிய செய்தவர்கள் தன் பாவங்களெல்லா நீங்கி சகல நன்மையும் சுகத்தையுமடைந்து முத்திக்கருகாராவார்கள்.

சிவபெருமானும் தனக்குண்டான இடையூற்றை நீக்கிக்கொள்ளப் பணிந்த ஸ்ரீ விநாயகப்பெருமானை சர்வேச்சுரனை நித்தியமாகத் தியானித்தால் சீக்கிரமாக அனுக்கிரகிக்கப்படுவார்கள்.

ஸ்ரீ விநாயகப்பிரதிஷ்டை செய்துள்ள இடத்தைச் சுற்றி நாற்பக்கங்களிலும் நூறுமுழ அளவுக்கு புண்ணியக்ஷேத்திரமென்றும்,விநாயக ராலயத்தையும்விநாயகரையும் யாவரேனுங் கண்டபோது தொழுதுசெல்லாராயின் உயர்ந்தவர்க ளானாலும் செல்வங்குன்றி இழிந்தோர்களாவார்க ளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

கிரேதாயுகத்தில் தியானத்தாலும் திரேதாயுகத்தில் தவத்தாலும் துவாபரயுகத்தில் சபத்தாலும் - கலியுகத்தில் விக்கிரக ஆராதனைகளினாலும் ஞானமுண்டாய் மோக்ஷமடைவர்களென்று மிருக்கிறது.

அரியதினுமரியதும் எல்லாப் பிறவியினுஞ் சிறந்ததுமாகிய மானிடப்பிறப்பையும், தியானிக்க மனதையும், தரிசிக்கக் கண்ணையும், அஞ்சலிக்கக் கையையும், வணங்கத்தலையையும், துதிக்கவாயையும், விதிவிலக்குகளைத்தெரிந்துகொள்ளுதற்குக்கருவியாகிய வேதமுதலியவைகளையும், ஆராய்ந்துணர உணர்வையும், உணர்ந்தபடி ஒழுகத்தக்க சக்தியையும் பரமகாருணியராகிய கடவுள் கொடுத்திருக்கிறார்.

ஆகையால் நாள்தோறும் ஆலயத்திற்குச் செல்லவேண்டும். ஆலயப்பணிசெய்யல்வேண்டும். திருமெழுக்கிடல்வேண்டும். திருவலகிடல்வேண்டும். பரிமளத்தூபமிடல்வேண்டும். திருவிளக்கிடல் வேண்டும். தூய்மையுடன் மலர்களெடுத்து மாலைகட்டிக் கொடுத்தல்வேண்டும். வலம்வரல் வேண்டும். விநாயகரைப் பூசிக்கவேண்டும். அப்பெருமானை மனதாரச் சிந்தித்து நாவாரவாழ்த்தி முடியாரவணங்கித் தரிசித்துப் பணிந்து தோத்திரஞ்செயல் வேண்டும். தியானித்து மும்முறை குட்டிக்கொண்டு வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் மாறிப்பிடித்துக் கொண்டு தாழ்ந்தெழுந்து தோப்பணம்போட்டு சிரசிற்கையைக் குவித்து மனங்கசிந்துருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தக்கண்ணருவி சொரிய தோத்திரஞ் சொல்லித் தொழல் வேண்டும். கணேசமந்திரத்தைச் செபித்தல் வேண்டும். விநாயகர் சந்நிதியிலே அவர்புகழ்ப் பாவினங்களைப் பண்ணோடுதோத்திரஞ்சொல்லிப்படித்தலும் அதனைக் கேட்டலும் வேண்டும். தங்கள் தங்கள் செல்வ வியல்பிற்கேற்ப திருப்பணியுடன் பூசை செய்வித்தலும் வேண்டும்.

சிவதருமங்களிற் சிறந்தது பிரதக்ஷிணம் நமஸ்கா ரம். விநாயகப் பிரானுக்கு பிரதக்ஷிண நமஸ்காரங்க ளின்றிச் செய்த விசேஷபூசை பயன்கொடாதாதலி னால் ஸ்ரீ விநாயகப்பிரானை மனதிலே தியானித்துக் கொண்டு ஒருயாமகாலமாவது முகூர்த்த காலமாவது பிரதக்ஷிணஞ் செய்தல் வேண்டும். இவை முதலிய சரி யைகிரியைகளைவிதிப்படி இடைவிடாது அநுஷ்டிக்கில் சதுர்வித புருஷார்த்தங்களும் எளிதில் கிடைக்கும்.

உடலினுக்குள்ளிருக்கும் பிராணனே சீவனெனப் படும். உடலின் வெளியிலுள்ள தனமும் பிராணனுக் குச் சமமேயாம். சீவனைக் கஷ்டப்படுத்தித் தவஞ்செ ய்தாவது பொருளை விரயப்படுத்தித் தானஞ்செய்தா வது முத்தியை யடையவேண்டும். பூசை தியான முத லியதவமும் ஆலயத்திருப்பணிக்குரியபொருளைத்தான முஞ்செய்யாமல் முத்திகிடைக்காது.

ஒருபலனைவிரும்பிப் பத்திசெய்வது இலகுபத்தியா கும். பலாபேக்ஷையால் செய்தவர்களுக்கும் விநாய கக்கடவுள் தக்கபலனைக் கொடுப்பார். பலாபேக்ஷை யின்றி நிஷ்காமியபத்தி செய்தவர்களே பிரீதியாகிய பத்தர்கள். அவர்களுக்குக் கிடைக்காததொன்றுமில்லை. உத்கிருஷ்டமான எல்லாச் சுகத்தையும் அவர்கள்பெறு வார்கள்.

ஸ்ரீ விநாயகக்கடவுள் வடிவமேயாகிய சிவபிரான் உமாதேவியார் சுப்பிரமண்ணியர் வீரபத்திரர் வைர வர் இவர்களைப் பூசிப்பதும், விநாயகப் பெருமானைப் பூசிப்பதே யாகும். மெய்யடியாரிடத்து திருவெண் ணீறு, உருத்திராக்கம், சிவநாமங்கள், திருமந்திரங்கள், சிவாகமங்கள், அப்பெருமானைக் களிக்கச்செய்யும் புக ழ்ப்பாவினங்கள் அப்பெருமானது மகிமைகள் ஆகிய

இவைகள் பிரகாசிக்கத் தோன்றலால் அவ்வடியார்களைப் பூசிப்பதும் ஸ்ரீ விநாயகரைப்பூசிப்பதேயாம். மரத்தின்வேரில் ஊற்றிய நீர் அதன்கிளைக்குமாவதுபோல விநாயகரைப்பூசித்தால் எல்லாத்தேவர்கட்குந் திருப்தியாகும். இவ்வாறன்றி ஜீவஹிம்சையை அங்கீகரிக்கின்ற துஷ்டதேவதைகளைத் தொழலாகாது.

தெய்வநாயகனை விநாயகக் கடவுளையே பரம்பொருளென்றுணர்ந்து மனவுறுதி கொண்டிருக்கு மன்பர்களையும், கணபதியையும் நித்திரையிலும், நடக்கையிலும், இருக்கையிலும், இரவிலும்பகலிலும்,யாது செய்கையிலும், எப்போதும் தியானமகலாதுள்ளவர்களையும், நித்தியநைமித்தியபூஜைகளைத்தவறாதுசெய்பவர்களையும். தூபதீபமுதலியவற்றால் ஆராதிப்பவர்களையும், ஆலய ஜீர்ணோத்தாரணஞ் செய்பவர்களையும், ஆலயத்தில் காலை மாலையில் திருவலகிட்டுச் சுத்தஞ் செய்பவர்களையும்,திருவிளக்கிடுபவர்களையும், பகைாலும் ஆலயத்திற் சென்று விநாயகரை மனமொருமைப்பட்டு வணங்குவோரையும் எமதூதராணுகார். அவர் விரும்பியவெல்லாஞ் சித்தியாகும்.

மனிதப்பிறவி கோடி கோடியுண்டாகில் அதில் ஒருசனனத்தில்தான் விநாயகப் பிரானிடத்து பக்தியுண்டாகும். அப்பக்தி ஸ்திரமாயுண்டா யிருக்கும் பட்சத்தில் அதுவே முத்திக்குக்காரணமாகும். பக்தியும் அவ்விறைவனது கிருபாநோக்கத்தி னலேயேயுண்டாகத்தக்கது

மானிடர்முத்தியடைதற்குமஹாதேவனைத்துதித்தலேதவிர வேறொரு மார்க்கமுங்கிடையாது.

சர்வேசனுகிய விநாயக மூர்த்தியைப் பூசித்துக் கொண்டிருக்கக்கண்டு சந்தோஷியாதவர்கள், நமஸ்கரியாதவர்கள், துதியாதவர்கள், பயபக்தியில்லாதவர்கள், தங்களிஷ்டப்படி நடப்பவர்கள்மகாபாதகத்தவர்களேயாவார்கள்.

சிவசரித்திரங்களை ஆக்ஷேபித்தல் வீண்கதைகளைக் கூறுதல் சிவசரித்திரஞ் சொல்லுகையில் அசுத்தமாகச்சென்றுசிரவணஞ்செய்தல் இவைகளால் சிவநிந்தையாலடையத்தக்க பெரும்பாவத்தை யடைவார்கள்.

## ஆலயத்தில் செய்யக்கூடாத குற்றங்கள்.

ஆசாரமில்லாதுபோதல்
கால்கழுவாதுபோதல்
எச்சலுமிழ்தல்
மூக்குநீர்சிந்தல்
அபானவாயுவிடுதல்
பாக்குவெற்றிலையுண்டல்
தம்பலம் உமிழ்தல்
நித்திரைசெய்தல்
சூதாடல்
மயிர்கோதிமுடித்தல்
வீண்பேச்சுப்பேசல்
சிரித்தல்
சிரசில்வஸ்திரம்தரித்தல்
தோளில்உத்தரியமிடல்
போர்த்துக்கொள்ளல்
சட்டைதரித்துக்கொள்ளல்
உன்னதத்தானத்திருத்தல்
ஆசனத்திருத்தல்
ஸ்தூபிவிக்கிரகங்களின் சாயையை மிதித்தல்
விக்கிரகத்தைத்தீண்டுதல்
ஓடிவலம்வரல்
திருவிளக்கவியக்கண்டு தூண்டாதிருத்தல்
உற்சவம் செய்யும்போது உள்ளேபோய்வணங்கல்
அகாலத்திலே தரிசித்தல்
பெண்களைத்தீண்டல்
பெண்களைப்பார்த்தல்
வீண்கீதம்பாடல்
கீழ்மக்களைப்புகழ்தல்
மேன்மக்களை இகழ்தல்.

இக்குற்றங்களை அறிந்துசெய்தவர்கள் நரகத்தில் வருந்துவார்கள்.

## விநாயகர் பூஜைக்குரிய பத்திரங்கள்.

சிறுசண்பகம்
கரசணங்கண்ணி
அலரி
மூங்கில்

| | |
|---|---|
| வில்வம் | வெள்ளெருக்கு |
| அறுகு | மருதம் |
| ஊமத்தை | விஷ்ணுகாந்தி |
| இந்தை | மாதுளை |
| துளசி | மந்தாரை |
| நாயுருவி | மருவு |
| சிறுவழுதை | ஜாதிமல்லி |
| வன்னி | வெண்ணொச்சி. |

## விநாயகர் பூஜைக்குரிய புஷ்பங்கள்.

| | |
|---|---|
| சிறுசண்பகம் | முல்லை |
| சாமந்தி | விஷ்ணுகாந்தி |
| மல்லிகை | வெள்ளைகாக்கணம் |
| சம்பங்கி | நாகை |
| செங்குவளை | மந்தாரை |
| தாழை | குரா |
| மகிழம் | கோங்கு |
| தாமரை | செம்பரத்தம் |
| புன்னை | வெள்ளெருக்கு |
| ஊமத்தை | அகத்தி |

மனத்துக்கும் கண்ணுக்கும் ரம்மியமானமலர்கள் யாவும்.

இவைமுதலிய சிறந்த பலபத்திர புஷ்பங்களால் விநாயகரைப் பூசித்து அன்போடும் அருச்சிக்கில்விநாயகர் மகிழ்வுடன் கிருபை புரிவார்.

## விநாயகர் மஹாமந்திரம்.

| | |
|---|---|
| ஏகாக்ஷரமந்திரம் | சோடசநாமமந்திரம் |
| சதுர்த்தாக்ஷரமந்திரம் | இருபத்தோர்நாமமந்திரம் |
| பஞ்சாக்ஷரமந்திரம் | அஷ்டோத்திர சகநாமமந்திரம் |
| சாடாக்ஷரமந்திரம் | சகஸ்திரநாமமந்திரம் |
| ஏகாதசநாமமந்திரம் | திருநாமமந்திரம் |
| துவாதசநாமமந்திரம் | |

என விநாயகக்கடவுள் மந்திரங்கள் பலபகுப்புக்களாக உள, அவைகளைக் குருமூலமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும்.

கணேசருக்குரிய மகா மந்திரங்கள் பலவற்றுள் ஏகாக்ஷர மந்திரமும், சோடசநாம மந்திரமும் மேம்பட்டதாகும். ஸ்ரீவிநாயகரது சொரூபமாகிய ஓம் என்னும் ஏகாக்ஷர மந்திரமாகிய பிரணவமும் தாரகமுமான மந்திரம் தனித்தும் கலந்தும் இயங்கும். அதுவே மந்திரராஜ மாகும். எல்லா மந்திரங்கட்கும் ஆதி மந்திரமாயுள்ளது. இம்மந்திரமே சிவசொரூபமானது. இப்பிரணவ மந்திரத்திலேயே விநாயகர் விளங்குவர். இம்மந்திரம் ஆன்மாக்களின் உஜ்ஜீவனார்த்தமாக சர்வேசனாலேயே சொல்லப்பட்டுள்ளது. சப்தகோடிமகா மந்திரங்களையும் அனேக உபமந்திரங்களையும் ஜபிப்பதால் வரும்பலனை விநாயகரது பிரணவ மகா மந்திரம் ஒன்றே கொடுக்கும்.

ஓம் சுமுகாயநமஃ
,, ஏகதந்தாயநமஃ
,, கபிலாயநமஃ
,, கஜகர்ணிகாயநமஃ
,, லம்போதராயநமஃ
,, விகடாயநமஃ
,, விக்நராஜாயநமஃ
,, கணபதியேநமஃ

ஓம் தூமகேதுவேநமஃ
,, கணாத்யட்சாயநமஃ
,, பாலசந்திராயநமஃ
,, கஜாநநாயநமஃ
,, வக்ரதுண்டாயநமஃ
,, சூர்ப்பகர்ணாயநமஃ
,, ஏரம்பாயநமஃ
,, ஸ்கந்தபூர்வஜாயநமஃ

எனச்சகஸ்திரநாமங்களிலிருந்தும் ஆராய்ந்தெடுத்த அச்சகஸ்திரநாமங்களையும் ஓதினபலனைத்தருவதான ஏகாட்சரமந்திரமுஞ் சேர்ந்த இத்திவ்வியசோடசநாமதிருமந்திரங்களை அனுசந்தித்து இம்மந்திரங்களின் அநுஷ்டானமூர்த்தியாகிய ஸ்ரீவிநாயகக்கடவுளது திவ்விய மூர்த்தத்தை மந்திரபூர்வமாகப் பூசிக்க வேண்டும். இச்சோடசதிருநாமங்களை வாக்கினாற்சொன்னாலும், செவியினாற்கேட்டாலும் வித்தை, விவாகம், சுபம், சோபனம், யாகம் முதலிய எல்லாக்காரியங்களும் கைகூடும்.

உத்தமமான இடத்திலிருந்து பூதசுத்தி, நியாசம், பிராணாயாமம் முதலியவைகளைக் கிரமப்படி செய்து, விநாயகக்கடவுள் திருவுருவத்தை மனதிற்றியானித்து, மானதபூஜையும் ஜபமும் செய்யக்கடவர்.

காசித்தலத்தில் சப்தஆவரணத்தில் எழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்திகளின் திருநாமங்கள்.

முதலாவரணத்தில்—துண்டிவிநாயகர், தார்க்கவிநாயகர், அர்ச்சகவிநாயகர்,பிரசன்ன விநாயகர், சந்திரவிநாயகர்,சித்ரூபவிநாயகர்என ஆறுமூர்த்தங்கள். இரண்டாம் ஆவரணத்தில் லம்போதரவிநாயகர், கூடதந்தவிநாயகர், சலாடவிநாயகர், குலப்பிரியவிநாயகர், சதுர்த்திவிநாயகர், முண்டகவிநாயகர், சமுசிகவிநாயகர், விடங்கவிநாயகர், நிஜாவிநாயகர், இராஜபுத்திரவிநாயகர், பிரணவவிநாயகர், எனப் பதினொருமூர்த்தங்கள்.

மூன்றும் ஆவரணத்தில்—வக்ரதுண்டவிநாயகர், எகதந்தவிநாயகர், திரிமுகவிநாயகர், பஞ்சமுகவிநாயகர், எரம்பவிநாயகர், விக்கினராஜவிநாயகர்,வரதவிநாயகர், மோதகப்பிரியவிநாயகர் என எட்டுமூர்த்தங்கள்.

நான்காம் ஆவரணத்தில்—ஏகோப்பியப் பிரதவிநாயகர், சிங்கமுகவிநாயகர், கூர்நிதாசவிநாயகர், கிப்ரசாத்விநாயகர், சிந்தாமணிவிநாயகர், தந்திரவக்கிரவிநாயகர்,அபிசண்டிவிநாயகர் ஊர்த்துவாண்டமுண்டவிநாயகர் என எட்டுமூர்த்தங்கள். ஐந்தாம் ஆவரணத்தில்—மணிகன்னவிநாயகர், ஆசரகிருட்டிவிநாயகர், கஜகன்னவிநாயகர். கண்டாவிநாயகர், சுமங்களவிநாயகர், மந்திரவிநாயகர், என ஆறுமூர்த்தங்கள்.

ஆறும் ஆவரணத்தில் - மோதக விநாயகர். சுமுக விநாயகர், துன்முக விநாயகர், கணப விநாயகர், அபர

விநாயகர், ஆக்கினை விநாயகர், துவார விநாயகர், அவிமுத்த விநாயகர், என எட்டு மூர்த்தங்கள். ஏழாம் ஆவரணத்தில்-ஆமோத விநாயகர், பாகீரத விநாயகர்; அரிச்சந்திர விநாயகர், கபர்த்திவிநாயகர், உபதாபவிநாயகர் கனகவிநாயகரென ஆறு மூர்த்தங்கள். ஆக ஐம்பத்தாறுமூர்த்தங்கள். இந்தநாமங்களைதேவகணங்கள் சொல்லக்கேட்ட சோமகாந்த ராஜன் குமாரன் ஏமகண்டனும் நகரவாசிகளும் தேவசரீரம்பெற்றுத்தனித்தனி விமானத்திலேறி விநாயகலோகம் சேர்ந்து பதவியடைந்தார்கள்.

## விநாயகர்அவதாரலீலைகளின்சிறப்புநாமங்கள்.

சித்திபுத்திவிநாயகர்
மயூரேசவிநாயகர்
தூமகேதுவிநாயகர்
கணபதிவிநாயகர்
இலக்கவிநாயகர்
சர்வசத்திவிநாயகர்
மந்தாரைவிநாயகர்
காலானலப்பிரியவிநாயகர்
வல்லைவிநாயகர்
பாலசந்திரவிநாயகர்
கணேசவிநாயகர்
மகோற்கடவிநாயகர்
சித்திவிநாயகர்
வன்னிவிநாயகர்
விண்டுவிநாயகர்
பீஜவிநாயகர்
மங்கலவிநாயகர்

உடுண்டிவிநாயகர்
சிந்தாமணிவிநாயகர்
கணபதி
ஏரம்பன்
மோகன்
தரணிதரன்
காலதரன்
கசியபத்தன்
மஹாகணபதி
கிப்பிரபிரசாதன்
ஆசாரபூதன்
வரதன்
ஜயன்
அமுதமந்திரன்
வாச்சிதரன்
பிரியகணபதி

இந்த மேலான திருநாமங்களை சிரத்தா பக்தியோடு சொன்னவர்களும் கேட்டவர்களும் துன்பமெ

லாம் நீங்கி மேலான பயனை யடைந்து நான்குபதவிக ளுக்கும் அருகராவர்.

அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம், என்னும்முத் தடையும் நீங்கி மனமன்பு செய்யக் கனிந்து கைகள் அஞ்சலிசெய்ய உயர்ந்து கண்கள் காணப்பரந்து வாய் துதிக்க விரைந்து தன்னை யடைந்தவர்க்கு அருள்செ ய்யுமப்பன். அகன்றவர்க்கு அருளாக் கடவுள். பத்தர் அத்தத்தறுகிற்கு முத்தியளிக்கும் பரமபிதா. பச்சிலை தூவிப்பரவுந் தொண்டர்களின் இச்சையைமுடிக்கும் இறைவன். கொண்டாடுவார் முனம்கூத்தாடுமத்தன். இவ்விதபெருங்கருணை யாளனும் எம்பெருமானுமான விநாயகப் பிரானைத் தியானித் திருப்பவர்க்குக் கிடைக் காத தொன்றுமில்லை.

ஜீவகோடிகட்கு எவ்வகைப்பிறவிகளினும் மானி டப்பிறவிவாய்த்தல்துர்லபம், அத்தகைய மானிடப்பிற விவாய்க்கினும் துர்நடைகளின்றி நன்னடைகளுடன் தெய்வபக்திமுதலியன வாய்ப்பது அதினும் துர்லபம். தெய்வபக்திவாய்க்கினும் சிவசொரூபமாய் சர்வகர்த் தாவாயுள்ள விநாயகப்பிரானிடத்து நீங்காப்பத்திவாய் ப்பது அதனினும் விசேஷதுர்லபம். விநாயகப்பிரானைச் சிந்தித்து வீடடைவதே மானிடப்பிறவி வாய்த்ததின் பிரயோஜனமாகும்.

ஒருவன் மரணமடைந்து தூலதேகத்தைவிட்டுச் செல்லுகையில் அவனுடைய தனதான்ய சம்பத்துகள் யாவும் வீட்டிலேயே யிருக்கின்றன. புத்திரமித்திரர் கள் மயானம் வரையில்வருவார்கள். அவன்செய்த சத் கருமதுஷ்கருமபலன்கள் மாத்திரம் அவனுடன்வ

ரும். ஆதலின் அவைகளை அறிந்துளளிதில் சத்கருமம் வரும்படியாக ஸ்ரீவிநாயகபூஜை தியானம்முதலியவை களைப்பெரும்பே றெனமதித்து யாவரும்செய்து வரல் வேண்டும்.

தான் சம்பாதிப்பதை தர்மம் விர்த்தி ஆத்ம சுகம் இவற்றிற்காக மூன்றாய்ப்பிரித்து தர்மப்பிரிவை நித்தியநைமித்திய காமியங்களுக்கும், விர்த்திப்பிரிவை பிறரை இம்சிக்காதுபொருளை விர்த்திசெய்தும், ஆத்ம சுகப்பிரிவை சிவாலயப்பணி அடியார் பூஜைமுதலிய வற்றிற்கு உபயோகிக்கவேண்டுமென்றும், வியாபாரத் தில் பாவமிருத்தலின் அதின்லாபத்தில்பத்திலொருபங் கு தானஞ்செய்யவேண்டுமென்றும், கெட்டவனிடத்தி லிருந்தாவது அக்கிரமத்திலிருந்தாவது வந்ததிரவிய முழுமையும் சமுத்திரத்திலெறியவேண்டு மென்றும் சொல்லப்பட்டிருப்பதினல்நன்மார்க்கத்தில் பொருளை த்தேடி தன் ஆத்மசுகத்துக்காக ஆலயப்பணி, விநாயக பூஜைமுதலிய சத்கருமங்களில் உபயோகித்து சிவானு க்கிரகம் பெற்று இருவினைத்தொடக்கொழிந்து முத்தி பெறல்வேண்டும்.

தர்மத்தால் பொருளும் இன்பமும் மோட்சமு முண்டு, பாவத்தால் துக்கமுண்டாம். பாவத்தைச்செ ய்தவர்கள் தக்கபிராயச்சித்தங்களைச்செய்து அதை விலக்கிக்கொள்ளாது பராமுகமாயிருந்தால் நரகத்தை யடைந்து கஷ்டப்படுவார்கள். அப்பாவம் ஒழியவிநா யகப்பிரானைப்பூஜித்து திரிகாலமும் ஸ்மரணைசெய்து கொண்டிருந்தால் பாபக்ஷயமாய் சகலபோகத்தையும் சித்தியையும் முத்தியையும் உண்டுசெய்யும்.

ஜென்மாந்திர புண்ணியத்தால் விநாயகரிடத்துப் பத்தியுண்டாய் பத்தியால் சிவதர்மங்களைச்செய்துசிவ

கருமங்களால் விநாயகப்பிரான் அனுக்கிரகம் வாய்ந்து அனுக்கிரகத்தால் மனமானது சலனமற்றுசமபுத்தி யுதித்து, அதினால் அஞ்ஞானம் நீங்கி ஞானமுண்டாய் ஞானத்தினால் ஜீவன்முக்தி வாய்க்கும்.

பெறுதற்கரிதான மனிதப்பிறப்பையுற்று மெய், வாய், கண், மூக்கு, செவி மனம் இவைகளால் அறிவதான ஆறறிவினையு முடையவர்களாய் மெய்நூல்களாகிய வேதாகமபுராணாதிகள் விளங்கும் புண்ணியபூமியான இப்பரதகண்டத்திலே பிறந்தும், இவைகளினருமையைச் சிறிதும் சிந்தியாது கருணாநிதியாகிய விநாயகப்பிரானுடைய மகிமையையும் புண்ணியபாவங்களையும் அவைகளின் பயன்களையும் நல்லாசிரியரைத்தேடி கற்றும்கேட்டும் அறிந்து பாவங்களைநீக்கிப்புண்ணியங்களைச்செய்து வாணாள்களை வீணாகக்கழிக்காது உயிர்க்குறுதிதேடி காயங்களினாலே அன்போடு வழிபட்டுச்சிந்தித்து நித்தியமாகியபேரின்பத்தைப் பெற்றுய்யக்கடவர்.

விநாயகரிடத்து பத்தியை விளைவிப்பது ஆலயசேவை, விக்கிரகத்திருவுருவசேவை, மந்திரஜெபம், விநாயகப்பிரபாவசிரவண பாராயணமுமேயாம்.

இச்சரிதமாகிய விநாயகப்பிரபாவம் சிரவணஞ் செய்தமாத்திரத்திலே ஆனந்தங்கொள்ளத்தக்கவை. தேவர்கள் முனிவர்கள் பாராயணஞ்செய்வதாயும் பாசபந்தங்களையும் மனோதுக்கங்களையும் போக்குவதாயுமிருக்கின்றது. இதை யாவரும் இடைவிடாது சிரவணம் பாராயணஞ்செய்து இஷ்டசித்திகளை அடையக்கடவர்.

இதை, சன்மார்க்க நடையினோர் பிரீதியாய்க்கேட்டால் அவர்கள் தீவினையாவும் ஒழிந்து சன்மார்க்க வார்கள். சன்மார்க்கநடையினர்கேட்டால் பேரா ந்தமடைந்து கணேசர் பாதாரவிந்தத்திற் கருக

ராவார்கள். விநாயக மூர்த்தியினுடைய சரித்திரப் பிரபாவத்தை மத்திமகுண முடையவர்கள் உண்மையோ அல்லவோவென்று சந்தேகித்து தெளிவில்லாமல் துன்மையையடைவர். உத்தமகுணத்தையுடையவர்சந்தேக விபரீதம்நீங்கிஉண்மையென்றேதெரிந்துசிந்தித்துச்சுக மடைவார்கள். புண்ணிய மில்லாதவர்களுக்கு விநாயகரிடத்துப்பத்தியென்பதுண்டாகாது.பாபக்ஷயமுண்டான போதுதான்பத்தியும் தியானஞ்செய்யநினைவும் உண்டாகும். தெய்வம் புண்ணியபாவம் சொர்க்கநரகம் இம்மை மறுமை என்பதில்லை யென்னும் நாஸ்திகர்களும் பாபிகளும நம்பமாட்டார்கள் தூஷணமே செய்வர். ஜென்மாந்திர புண்ணிய மில்லாதபாபிகள் செவியில் ஒரு நாளும்புகாது அது அவர்கள் கர்மமென்றறியத்தக்கது. கர்மாநுபவம் விலகி சிவாநுபவத்திற் றெளிவுடையோர்க்கே விநாயகப் பிரபாவம் உண்மையாக விளங்கும்.

ஆகையால் நித்தமுத்த ஆதியந்தமில்லாத ஆனந்தமூர்த்தியாய் மறைபுகன்றமுற்றுமகிமை யுடையோராய் ஓங்காரத் துட்பொருளாய் எங்கும் நிறைந்த பரமாய் சித்தி, புத்தி, வல்லபையாகிய நாயகிகள் சூழ பிரமாதி தேவர் முனிவர் சித்தர் முனிவோர் யாவரும் உபாசனை செய்து உவந்தபடி சித்தியை விரும்பினவர்க்குச் சித்தியும், முத்தியை விரும்பினர்க்கு முத்தியும் பெறத் தந்தருளும் அற்புதராய் ஆங்காங்கு சேமமளித்த தீபமென்னும்ஆலயத்தில் திருவடிவுகொண்டெழுந்தருளிய விநாயகப் பெருமானது திருவிளையாடல்களைபெறும் பேறெனமதித்துஇவ்வமலநாதனைச் சதா சிந்தித்து விநாயகப் பிரபாவத்தை சிரவணம்செய்து வாழ்தலே உலகம் பெற்றுய்யத்தக்க வாழ்வாகும். அவர்கள் வெவ்வினைக ளெல்லாம் நீங்கி விநாயகரது சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய மென்னும் நான்கு பதவிகளையும் அடைந்து சுகமுறுவார்கள்.

விநாயகப்பிரபாவவிளக்கம் முற்றிற்று

---